கர்த்தர் ராஜரிகம் பண்ணுகிறார்!

# இயேசு உங்களை நேசிக்கிறார்

ஆகஸ்ட், 2026

# இனி ஒரு சாபமுமிராது

2026 AUGUST

# இனி ஒரு சாபமுமிராது

"இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்." – வெளி. 22:3

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, புதிய வானம், புதிய பூமி மற்றும் புதிய எருசலேம் வந்தபின்பு இந்த வசனம் சொல்லப்பட்டது. 'இனி ஒரு சாபமுமிராது' என்றார்.

அப்படியானால் அன்றைக்குச் செய்யப்போகும் தேவன் இன்றைக்கும் செய்ய வல்லவராயிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயும், குறிப்பிட்ட ஜனங்களுக்குள்ளேயும் இதே வசனத்தைத் தேவனால் நிறைவேற்ற முடியும். ஏனென்றால் இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.

அன்றைக்கு மார்த்தாள், "கடைசி நாளில் லாசரு உயிரோடு எழுந்திருப்பான்" என்றாள். ஆனால் இயேசு ராஜா: "இன்றைக்கும் என் பிதா எனக்குச் செவி கொடுப்பார்" என்று சொல்லி, லாசருவை இயேசுராஜா உயிரோடு எழுப்பினார். அதற்கு "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்றார். ஆம், பிரியமானவர்களே, இன்றைக்கு உங்கள் குடும்பத்திற்கு ஒரு சாபமும் இல்லாத நிலை வர வேண்டும் என்பதைக் குறித்துப் பார்க்கப்போகிறோம்.

நானும், பிள்ளைகள் ஆலிஸ், டேரீஸ், ஹேரீஸ் எல்லோரும் சேர்ந்து சில கலர் கலர் மீன்களை வளர்த்திருக்கிறோம். குடும்பத்தில் உள்ள எல்லோருமே எல்லா ஜீவராசிகளின் மீதும் அன்பு பாராட்டி, உணவு கொடுத்து வளர்த்திருக்கிறோம். திடீரென்று சில மீன்கள் சுகவீனமாகி fish tank ல் கீழே போய் நின்றுவிடும். மேலே வருவதேயில்லை. அதன் சரீரத்தில் காயங்கள் சிவப்பாகத் தெரியும். பின்பு அது சாப்பாடு சாப்பிடுவதை நிறுத்தும்.

சகோதரன் J. ஆலன்பால்

அதன்பின்பு சாய்ந்து நிற்க ஆரம்பிக்கும். பின்பு அப்படியே செத்துப் போகும். அதை எடுத்து வெளியே போடுவோம்.

Parasite என்கிற ஒரு சிறு கிருமி மீன்களைப் பாதிப்பதால் இந்த நோய் வருகிறது. இந்தக் கிருமி ஒரு மீனிடம் வந்தால் அது கொஞ்சம் கொஞ்சமாக மற்ற மீன்களுக்குப் பரவும். அந்தக் கிருமி மீனுக்குள் வரும்போது, அது மீனைச் சாப்பிடவிடாமல் ஒரே இடத்தில் நிற்கப் பண்ணும். பின்பு கொஞ்சம் கொஞ்சமாகச் சாகப்பண்ணும்.

ஒரு மீன் Parasite கிருமியை விட பலஆயிர மடங்கு பெரியது. ஒரு மீன் உள்ளங்கை அளவுக்கு இருக்குமானால் Parasite கிருமி கண்ணுக்குத் தெரியாத அளவு சிறியது. உங்கள் தலையில் இருக்கிற பேனைக் காட்டிலும் நூறில் ஒரு பங்கு சிறியதாக இருக்கும். அவ்வளவு சிறியது. அந்தக் கிருமி ஒரு மீனைக் கொன்று விடுகிறதா? இதிலிருந்து தப்புவிக்க வேண்டும். அதிலிருந்து விலகியிருக்க என்ன step எடுக்க வேண்டும் என்று பார்த்து வளர்க்க வேண்டும்.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவதினாலே பிதா நமக்குப் பாராட்டின அன்பு இன்னதென்பதை நாம் அறிந்திருக்கிறோம். உலகத்தில் அநேக தங்க மீன்கள் இருக்கிறது. அந்தத் தங்க மீன்களைச் சில சாபங்கள் தொடர்ந்து பிடித்து, அமைதியாக்கி, சபைக்குப் போவதை நிறுத்தி, வேதம் வாசிப்பதை நிறுத்த வைத்து, ஜெபம் பண்ணுவதை நிறுத்தி, சபை கூடி வருவதை நிறுத்தி, பின் ஒருநாள் முற்றிலும் ஜீவனற்றதாக மாற்றி விடுகிறது. போராட்டம், மனஅழுத்தம், பெலவீனத்தின்மேல் பெலவீனம் என்று சொல்லி, ஒருநாளில் கொள்ளை கொண்டு போய்விடுகிறது இந்தச் சாபங்கள்!

என் அன்பு தேவனுடைய பிள்ளைகளே, சாபமில்லாத கிறிஸ்தவன்/ள் என்று நீங்கள் இருக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். அதினால்தான் இதை உங்களுக்குக் கற்றுத் தருகிறார்.

## சாபம் வருவதற்கான காரணங்கள்!

சாபங்களைப் பல வகைகளாகப் பிரிக்கலாம். அதில் ஒன்று

நாம் தேவனை விட்டு தேவன் அல்லாதவைகளைத் தொழுது சேவிக்கும்பொழுது, சாபம் குறிப்பிட்ட அளவு வந்துதான் நிற்கிறது. மூன்று அல்லது நான்கு தலைமுறைகள் பாதிக்கப்படுகிறார்கள்.

“என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் நான் நியாயம் விசாரிக்கிறவராய் இருக்கிறேன்” என்கிறார் ஆண்டவர். ஒரு தாய் தன்னுடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் ஊற்றிதான்

பிள்ளையைக் கர்ப்பத்தில் வளர்க்கிறார்கள். ஆகவே தாய்க்கும் பிள்ளைக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த ஐக்கியம் இருப்பதினால் “பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள்” என்று வேதம் சொல்லுகிறது.

அவர்களைக் கனம்பண்ணினால் உங்களுடைய ஆயுசு காலம் கூடும். நீடித்தநாட்கள் வாழ்ந்திருக்கலாம். இந்த ஐக்கியம் இதோடு நிற்கவில்லை. மூன்று அல்லது நான்கு தலைமுறைக்குப் போகிறது.

பேரன், பேத்திகள் தங்கள் பாட்டி, தாத்தாக்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தையும் செய்ய வேண்டும். அவர்களுக்குப் பதில் நன்மை செய்ய வேண்டும் என்று பவுல் எழுதியிருக்கிறார். அங்கு வரைக்கும் தொடர்பு இருக்கிறது என்கிறார்.

‘‘முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்திசொல்லு. உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு.

விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேர்த்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது.”

– 1தீமோத்தேயு 5:2-4.

முதலாவது தேவனல்லாதவைகளைத் தேவனைப்போல தொழுது சேவிக்கும்பொழுது சாபங்கள் இன்னும் அதிகமாய்ச் செல்லும். மூன்று அல்லது நான்கு தலைமுறைகளுக்கு சாபம் அதிகமாய்ச் சேர்த்து வைக்கப்படுகிறது. என்னதான் இருந்தாலும் ஆபிரகாம் கர்த்தரோடு நடந்து வந்தபொழுதும் அவருக்குப் பிள்ளைச் செல்வம் தாமதமாயிற்று. சாராளுக்குப் பிள்ளைக் கிடைக்காமலேயே பிள்ளைப்பேறு நின்றுபோயிற்று என்று எழுதப்பட்டுள்ளது. இது ஆசீர்வாதம் கிடையாது. திரும்ப ஆண்டவரே சாராளுக்கு இரங்கினார்.

“அடுத்த உற்பவ காலத்திட்டத்திலே திரும்ப வருவேன். சாராள் ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாள்” என்று பேசினார். அற்புதம் நடந்தது. பிள்ளைப் பேறு இல்லாத கஷ்டம் முதலாவது இருந்தது. இது ஆபிரகாமை மட்டும் பாதிக்கவில்லை.

ஈசாக்குக்கு சுமார் 40 வயதிலே திருமணம் நடைபெற்றது. என்றாலும் 20

வருடங்கள் பிள்ளைச்செல்வம் இல்லாமல் இருந்தார். அதன்பின்பு ஈசாக்கு தன் மனைவிக்காகக் கர்த்தரை

நோக்கி ஜெபித்தார். கர்த்தர் கிருபையாக இரட்டைப் பிள்ளைகளைக் கொடுத்தார். இதிலும் கால தாமதம் இருந்தது.

யாக்கோபுக்கு லேயாள், ராகேல் என இரண்டு மனைவிகள் இருந்தார்கள். லேயாள் நான்கு பிள்ளைகளைப் பெற்ற பின்பு பிள்ளைப்பேறு நின்றுபோயிற்று.

"மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிட்டாள்; பிற்பாடு அவளுக்குப் பிள்ளைப்பேறு நின்றுபோயிற்று." – ஆதி. 29:35

லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டதை நினைத்து, தேவன் ராகேலின் கர்ப்பத்தை அடைத்திருந்தார். அங்கும் பிள்ளைப்பேறு உண்டாகத் தாமதமானது. பென்யமீனைப் பெற்றபோதே ராகேல் மரித்துப் போனாள். மூன்று தலைமுறைக்கும் இந்தப் பிரச்சனை தொடருகிறது பாருங்கள்!

யாக்கோபின் மகன் யோசேப்பு வரும்போது இந்த விதமான தாமதங்கள் கஷ்டங்கள் பிள்ளைப்பேற்றில் இல்லை.

அன்பு தேவனுடைய பிள்ளைகளே, இந்த லேயாளுக்குத் தேவன் திரும்ப செவிகொடுத்தார்.

''தேவன் லேயாளுக்குச் செவிகொடுத்தார். அவள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஐந்தாம் குமாரனைப் பெற்றாள்." – ஆதி. 30:17

சாபங்கள் பிள்ளைப்பேற்றைத் தடுக்கும். சரீர சுகத்தையும், உங்கள் பொருளாதார நன்மைகளையும் பாதிக்கும். குடும்பத்தில் பிரிவினைகளையும் ஏற்படுத்தும். இதுபோன்ற ஏராளமான காரியங்களைச் சாபங்கள் செய்யும்.

''...பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள்.''
– யோசுவா 24:2

ஆபிரகாமின் தகப்பன் செய்த தவறினால் வீட்டில் மூன்று நான்கு தலைமுறையாகச் சில பாடுகளும், வேதனைகளும் தொடர்ந்து வந்தது. இந்தச் சாபங்கள் தடுக்காமல் இருந்தால் கர்த்தர் கர்ப்பத்தை அடைப்பார். சாபங்கள் தடுக்கப்படாமல் இருப்பதினால் பிள்ளையைப் பலியிடும்படிக் கேட்கிறார். பிள்ளைக்கு அடுத்தக் காரியத்திலே சாபம் தொடருகிறது. தேவனை விட்டு, சிருஷ்டிகரை விட்டு, சிருஷ்டியைத் தொழுது சேவிக்கத் தொடங்காதிருங்கள். சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற மனிதனையும், மனுஷியையும் தெய்வம்போல எண்ணி வணங்காதிருங்கள்.

சில நடிகர்கள், நடிகைகள் மற்றும் சில மேன்மக்களை இந்த உலகத்திலே சிலர் அவர்களைத் தெய்வங்களைப் போல எண்ணி, தங்களுடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கிற சூழ்நிலைக்குச் செல்லுகிறார்கள் அல்லவா!

அமெரிக்காவில் பெயர் பெற்ற ஒரு நபர் இருந்தார்கள். அவர் மரிக்கும்போது ஊரிலிருந்து எல்லோரும் புலம்பினார்கள். பின்பு பல ஆண்டுகள், அவர் இறந்த நாளை ஞாபகப்படுத்தி, அவருடைய கல்லறையில் பூங்கொத்தை

வைத்துச் செல்வார்கள். அன்பு தேவனுடைய பிள்ளைகளே, பிறரிடம் நாம் அன்புகூறலாம். அன்பு செய்வதில் தவறில்லை. ஆனால் தேவனுக்குரிய இடத்தை மனிதர்களுக்குக் கொடுக்காதிருங்கள். ஆகவே தேவன் வெறுப்பார். சாபங்கள் கடந்து வரக் கூடும்.

## மனிதர்கள் கொடுக்கிற சாபங்கள்!

இதில் ஒரு சிலர் காரணத்தோடு சபிப்பார்கள். சிலர் காரணமில்லாமல் சபிப்பார்கள்.

“அடைக்கலான் குருவி அலைந்து போவதுபோலும், தகைவிலான் குருவி பறந்து போவதுபோலும், காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது.”
– நீதி. 26:2

இப்படியிருந்தும் ஒரு சில சாபங்கள் உங்கள் வாழ்க்கையில் இருக்கிறது என்றால் கர்த்தர் இந்தக் காரியம் நீதியாயிருக்கிறதா என்று பார்க்கிற நேரத்தில் சாபங்கள் உங்கள் வாழ்க்கையில் பின்தொடருகிறது. ஆனால் அந்தச் சாபங்கள் தங்காது. காரணமில்லாமல் ஆயிரம் பேர் அல்லது கோடி பேர் சாபமிட்டாலும் அது உங்கள் வாழ்க்கையில் பலிக்காது. கர்த்தருடைய பெயரைச் சொல்லி, காரணமில்லாமல் சாபமிட்டாலும் அது தங்காது.

ஆனால் காரணத்தோடு இடுகிற சாபம் தங்கும், பலிக்கும்.

“சீகேம் மனுஷர் செய்த எல்லாப் பொல்லாப்பையும் தேவன் அவர்கள் தலையின்மேல் திரும்பும்படி செய்தார்; யெருபாகாலின் குமாரன் யோதாமின் சாபம் அவர்களுக்குப் பலித்தது.”
– நியாயாதி. 9:57

காரணத்தோடு யோதாம் கொடுத்த சாபம் அவர்களுக்குப் பலித்தது. மனிதர்கள் காரணத்தோடு சாபம் கொடுக்கும்படி நடக்காதிருங்கள். யாரையும் ஏமாற்றாதிருங்கள். யாரிடமும் எதையும் பறித்துக் கொள்ளாதிருங்கள். சுயசித்தத்தின்படி அவர்கள் கொடுத்தால் பரவாயில்லை. இல்லையென்றால் அது வேண்டாம். கர்த்தர் பார்த்துக்கொள்வார். “கர்த்தருடைய பர்வதத்தில் பார்த்துக் கொள்ளப்படும்” (ஆதி. 22:14) என்று தைரியமாக நிற்க உங்களுக்குத் தெரிய வேண்டும்.

பெற்றோரைக் கொள்ளையிட்டு, இது விளையாட்டுக்குத்தான் செய்தேன் என்று சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். பெற்றோரைக் கொள்ளையிடாதிருங்கள். அவர்கள் வாழ வேண்டும். பெற்றோரிடமிருந்து எல்லாப் பணத்தையும் வாங்கிச் சுருட்டிவிட்டு, பெற்றோரைக் கவனிக்காமல் விடுகிற பிள்ளைகள் இருக்கிறார்கள்.

பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுகிறவர்கள் இருக்கிறார்கள். பெற்றோரைக் கவனிக்க வேண்டும். கனம் பண்ண வேண்டும். அவர்கள் வாழுவதற்குத் தேவையாக வைத்துள்ள பணத்தைப் பறித்து உல்லாசமாக இருக்க எண்ணாதிருங்கள். அவர்களை வாழ விடுங்கள். உங்களால் இயன்ற ஒரு பங்கை அவர்களுக்குக் கொடுத்து வாழுங்கள். நன்மையும் கிருபையும் உங்களைத் தேடி வரும்படி ஆண்டவருடைய கரத்தில் ஒப்புக் கொடுங்கள். ஆண்டவர் ஏராளமான நன்மைகளை வைத்திருக்கிறார்.

நீங்கள் பெற்றோர், மற்றவர்களிடம் காரணத்தோடு சாபங்களை வாங்கி ஓடாதிருங்கள். ஒருவேளை நீங்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குப்போய்ச் சேருகிறவர்களாக இருக்கலாம். ஆனால் பயத்தோடும், திகிலோடும் மனுஷர் கொடுக்கிற சாபங்களைச் சுமந்துகொண்டு, பற்பல நன்மைகளை இழந்துகொண்டு, ஓடுகிற ஓட்டம் வேண்டாம்.

தாவீது சவுல்மேல் கைவைக்கப் பயந்தார். சால்வையின் ஒரு தொங்கலை அறுத்ததற்கு அவருடைய மனது அடித்துக் கொண்டது. “சவுல் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்'' என்று எண்ணிப் பயந்தார். ''எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்” (நீதி. 28:14) என்று சொல்லுகிறது இதுதான். மற்றவர்களுடைய வாயில் விழக்கூடாது. நீங்கள் எல்லாரோடும் சமாதானமாய் இருப்பது நல்லது. சாபங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து, அது என்ன செய்யப் போகிறது என்று எண்ணக் கூடாது. அதற்கு விலகி வாழ வேண்டும்.

மனிதர்கள் கொடுத்த சாபங்கள் உங்கள் வாழ்க்கையில் பலிக்காமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

குடும்ப சாபங்கள் என்று ஒன்று இருக்கின்றது. குடும்ப சாபங்கள் நீங்குவதற்கும் வழி இருக்கிறது.

''கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறது என்னவென்றால்: என்னைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்.”

– ஆமோஸ் 5:4

ஒரு குறிப்பிட்ட ஐயா தலையை ஆட்டி, ஆட்டிப்பேசுவார். அவருடைய மகனும் அப்படியே தலையை ஆட்டிப் பேசுவார். ஒரு நோயும் இல்லை. ஆனால் “எங்கள் குடும்பத்தில் சாபம் இருக்கிறது. ஆகவே இப்படியே பேசிப்பழகிட்டோம்” என்றார்கள்.

கர்த்தரைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள். குடும்ப சாபங்களை நீக்குவதற்குக் கர்த்தரைத் தேட வேண்டும். கர்த்தர் சமுகத்தை நாட வேண்டும். ஆண்டவருக்கு நேரத்தை ஒதுக்கி, ஆலயத்தில் தேவ சமுகத்தில் அமர வேண்டும். அப்பொழுது பிழைப்பீர்கள்.

நான் பல நாட்கள் தேவ சமுகத்தில் காத்திருந்து, துதி பாடவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும், காத்திருந்து ஜெபிக்கவும், வேதத்தை ஆராய்ந்து புரிந்து கொள்வதிலும் நான் நேரத்தைப் பயன்படுத்துகிறேன். ஒரு சில நாட்களில் காலை முதல் மாலை வரை அதிக மணி நேரங்கள் தேவ சமுகத்தில் அமர்ந்திருப்பேன். ஊழியம் பெரிதாக மாறும்பொழுது, தேசத்திற்காகவும், இந்தியாவுக்காகவும், தமிழ்நாட்டிற்காகவும், ஊழியங்களுக்காகவும், ஊழியத்தில் பணி செய்பவர்களுக்காகவும், ஜெபிக்கிறவர்களுக்காகவும், கொடுக்கிறவர்களுக்காகவும் இன்னும் அநேகக் காரியங்களுக்காக நான் ஜெபிப்பேன். அப்படியே என் காலங்கள் கடந்துபோய்க் கொண்டு இருக்கிறது. கர்த்தரைத் தேடுவதற்கு இன்னும் எனக்கு சமயம் போதாது. ஏராளமான நாட்கள் நான் ஆண்டவரோடு சஞ்சரித்து வந்திருக்கிறேன். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

நீங்கள் ஒரு மணி நேரமாவது கர்த்தருடைய சமுகத்தில் அமர்ந்து ஜெபிக்கக் கூடாதா? கர்த்தரைத் தேடுங்கள். உங்கள் சாபங்கள் எல்லாம் முறிந்துவிடும். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச் சிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (2 கொரி. 5:17)

ஒரு சில வீடுகளில் இந்த மாதமானால் இந்தப் பிரச்சனை வரும். இந்த மாதமானால் இந்த வியாதி வரும் என்று சொல்வார்கள். இனி அப்படியல்ல. உங்களைத் தேவன் வாழ வைப்பார்.

“ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்.” – வெளி 21:7

உங்கள் குடும்பத்தில் எதினால் சாபங்கள் வந்தது, என்பதைக் கண்டுபிடியுங்கள். பெற்றோரில் சிலர் திக்கற்ற பிள்ளைகளுக்கு உதவி செய்யாமல், விதவையான பிள்ளைகளை விரட்டியடித்து, ஊழியர்களைப் பரிகசித்துப் பேசி துரத்தியிருக்கலாம். அதினாலே சாபங்கள் வந்திருக்கலாம். அதை நீங்கள் ஜெயிக்க வேண்டும்.

நீங்கள் ஒரு அனாதை இல்லத்தைப் பார்த்து, அதற்கு உதவி செய்யுங்கள். அப்படி ஜெயமெடுங்கள். உங்கள் பெற்றோர் திக்கற்ற பிள்ளைகளுக்குச் செய்யாத உதவியை நீங்கள் செய்யும்பொழுது, உங்கள் சாபத்திற்கு நீங்கள் முடிவு கட்டுகிறீர்கள். அப்பொழுதே அந்தச் சாபம் முறிந்துவிடும். வாழ்க்கையில் அதைக் கடமையாய் எப்பொழுதும் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒருவேளை உங்கள் பெற்றோர், ஊழியர்களைத் திட்டி, துரத்தியிருக்கலாம். நல்ல தேவனுடைய ஊழியர்களை நீங்கள் காணும்போது அவர்களுக்கு உதாரத்துவமாகக் கொடுங்கள். அவர்களை நன்கு வாழ்த்துங்கள். விசாரியுங்கள். திக்கற்ற பிள்ளைகளுக்கு, விதவைகளுக்கு நன்மை செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் ஜெயிப்பீர்கள். எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வீர்கள். குடும்ப சாபங்கள் தொடராது.

இச்சையில் தவறாக நடந்து, அதினால் குடும்பத்தில் சாபத்தைச் சேர்த்தவர்களாக உங்கள் முன்னோர்கள் இருந்தால், இச்சைக்கு எதிராக ஆவிக்குரிய யுத்தத்தைச் செய்து, விபச்சார, வேசித்தன ஆவிகளைக் கிறிஸ்து இயேசுவின் நாமத்தினால் ஜெயித்துக் கொள்ளுங்கள். அதன்பின்பு பரிசுத்த ஆவியானவர் எங்கெங்கு ஜெயம் எடுக்க வேண்டுமென்று கற்றுத் தருவார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தைப் பயன்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தினாலே எல்லா முழங்கால்களும் முடங்கும். சாபங்களும் முடங்கும். நீங்கள் ஜெயிப்பீர்கள்.

‘‘ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்.”

– தானியேல் 4:27

அன்பு தேவனுடைய பிள்ளைகளே, இரண்டு ஆலோசனைகள் தானியேலிடமிருந்து வருகிறது. நீதியைச் செய்து பாவங்களை அகற்றிவிடும். சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களை அகற்றி விடும்.

உங்கள் மூதாதையர் செய்து வைத்த பாவங்கள், அக்கிரமங்கள் இருக்கலாம். நீங்களே செய்த பாவத்தினாலும், அக்கிரமத்தினாலும் சாபங்கள் உங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கலாம். இந்த இரண்டையும் செய்தால் சாபங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம்.

இந்த உலகத்திலே தவறுகளை அதிகமாகச் செய்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட நாளிலே தானதர்மம் செய்கிறார்கள். தவறு செய்துக் கொண்டே தான தர்மம் செய்யக்கூடாது. “துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது” (நீதி. 15:8). பாவம், தவறுகள் செய்வதை நிறுத்தி விட்டு, தான தர்மம் செய்யுங்கள்.

நீதியைச் செய்து பாவங்களை அகற்ற வேண்டும். பள்ளியில் ஆசிரியர்



கரும்பலகையில் நிறையப் பாடத்தை எழுதிப் போட்டிருப்பார். நான் பள்ளியில் படிக்கும்போது சில வருடங்கள் class leader ஆக இருந்திருக்கிறேன். அடுத்த

ஆசிரியர் வருவதற்குமுன்பு ஓடிப்போய் Dusterஐ எடுத்து எல்லாவற்றையும் அழித்துவிடுவேன். உங்களிடம் ஒரு Duster இருக்கிறது. நீங்கள் அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களினாலோ, உங்களுடைய மூதாதையர் செய்த பாவங்களினாலோ வந்த சாபத்தை அழிக்க முடியும்.

இந்த உலகத்திலே அவரவர் செய்யும் பாவங்கள் இருக்கிறது. தங்கள் வாழ்க்கையின் செயல்பாடுகளால் வருகிற தீமைகள் இருக்கிறது. அது ஒருநாள் உங்களை சந்திக்கிறது. அது சாபமாகவும் வந்து சேருகிறதினால் வெள்ளம்போல வந்து உங்களை அடித்துக் கொண்டுபோகிறது. அப்பொழுது நீங்கள் அழுகிறீர்கள். கர்த்தரிடம் முழுமையாக அர்ப்பணித்தவர்கள் இதிலிருந்து விலகி விடலாம்.

உங்கள் வாழ்க்கையில் எல்லாக் காரியத்திலும் நீதி செய்ய வேண்டும். நீதி செய்யும்போது பழைய பாவங்கள் அகன்று விடும். உங்களுடைய குறைவின் நாட்களை விட நிறைவின் நாட்கள் அதிகமாக இருக்கிறது என்று ஆண்டவர் மனமிறங்கி விடுவார்.

அதோடுகூட சிறுமையானவர்களுக்கு இரங்குங்கள். எல்லாச் சாபங்களும் ஒழிந்து போவதைப் பார்ப்பீர்கள்.

தானியத்தைக் கட்டி வைத்திருக்கிறவனை ஜனங்கள் சபிப்பார்கள் (நீதி. 11:26). உங்களிடம் இருக்கிற தானியங்களைத் திக்கற்றவர்கள், எளியவர்களுக்குக் கொடுங்கள். சிறுமையானவர்களுக்கு இரங்கும்போது கர்த்தர் உங்கள் அக்கிரமங்களை நீக்கிவிடுவார். நீங்கள் சுகித்திருப்பீர்கள். ஆமென்! ■

சாட்சி!

## Blood cancer சுகமானது!

என்னுடைய கணவரின் தம்பி மகனுக்கு 4 மாதங்களாக blood cancer இருந்தது. நாங்கள் பார்த்த மருத்துவமனையில் நிறைய பணம் செலவாகும். 2 வருடங்கள் மருத்துவமனையில் இருக்க வேண்டும். அதனால் வேறொரு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல சொன்னார்கள். நாங்கள் எங்கு செல்வது என்று தெரியாமல் ஜெபித்துக் கொண்டேயிருந்தோம். பின்பு நாங்கள் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து ஜெப விண்ணப்பம் எழுதிக் கொடுத்தோம். இயேசப்பா, “மகனுக்குப் பரிபூரண சுகம் கிடைத்தால் நான் சாட்சி சொல்லுவேன்” என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்துச்சென்றேன். சகோதரன் ஜெப வேளையில், “நீங்கள் blood cancer என்று பயப்படாதீர்கள். கர்த்தர் சுகத்தைத் தருகிறார்” என்று சொன்னார்கள். இயேசப்பா, “உம் சமுகத்தில் பிள்ளையை ஒப்படைக்கிறேன்” என்று சொல்லி, ஜெப எண்ணெயைத் தலையில் பூசி ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். கடந்த மாதம் அதே மருத்துவமனைக்குச் சென்று செக்கப் பண்ணிப் பார்க்கும்போது கேன்சர் அறிகுறியே இல்லையே என்று ஆச்சரியத்தோடு டாக்டர்கள் சொன்னார்கள். எல்லா டெஸ்ட்டும் எடுத்துப் பார்த்தும் எல்லாம் நார்மல் என்று சொன்னார்கள். கர்த்தர் பெரிய அற்புதத்தைச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி ராதா, அலமாதி.

## தெரிந்து கொள்வோமா!

# வால்நட்

### 1. எலும்பு ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்

வலுவான மற்றும் ஆரோக்கியமான எலும்புகளைப் பராமரிக்கத் தேவையான பல ஊட்டச்சத்துக்கள் வால்நட்ஸில் நிறைந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க அளவு தாமிரம், மாங்கனீசு (Manganese) மற்றும் மெக்னீசியம் (Magnesium) உள்ளது. எலும்பு உருவாக்கம் மற்றும் பராமரிப்புக்கு அனைத்தும் அவசியம். கூடுதலாக, அக்ரூட் பருப்பில் காணப்படும் ஓமேகா -3 கொழுப்பு அமிலங்கள் கால்சியம் உறிஞ்சுதலை மேம்படுத்தலாம். மேலும், எலும்பு ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது.

### 2. மூளையின் செயல்பாட்டை ஆதரிக்கிறது மற்றும் நியூரோடிஜெனரேட்டில் நோய்களின் அபாயத்தைக் குறைக்கலாம்

அக்ரூட் பருப்புகளின் மூளை வடிவத் தோற்றம், அறிவாற்றல் செயல்பாட்டை ஆதரிக்கும் ஆற்றலின் பொருத்தமான பிரதிநிதித்துவமாகும். வால்நட்களில் ஆல்பா-லினோலெனிக் அமிலம் (ALA-Alpha-Linolenic Acid ) செறிவூட்டப்பட்டுள்ளது. இது மூளை வளர்ச்சி மற்றும் செயல்பாட்டில் முக்கியமான ஓமேகா -3 FA வகையாகும். மேலும், அக்ரூட் பருப்பில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் மூளைத் திசுக்களை ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்திலிருந்து பாதுகாக்க உதவும் . அல்சைமர் மற்றும் பார்கின்சன் போன்ற நரம்பியக்கடத்தல் நோய்களின் வாய்ப்பைக் குறைக்கும்.

### 3. வகை 2 நீரிழிவு நோயை நிர்வகிக்க உதவலாம்

சமச்சீரான உணவில் அக்ரூட் பருப்பைச் சேர்த்துக் கொள்வது வகை 2 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயனளிக்கும். இந்தப் பருப்புகளில் கார்போஹைட்ரேட்டுகள் குறைவாகவும் நார்ச்சத்து அதிகமாகவும் உள்ளது. இது இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும் இன்சுலின் உணர்திறனை மேம்படுத்தவும் உதவும். கூடுதலாக, அக்ரூட் பருப்பில் காணப்படும் ஆரோக்கியமான கொழுப்புகள் மற்றும் தாவரக் கலவைகள் சிறந்த குளுக்கோஸ் கட்டுப்பாடு மற்றும் குறைக்கப்பட்ட வீக்கத்திற்கு பங்களிக்கக்கூடும். இது நீரிழிவு நோயை நிர்வகிப்பதற்கு முக்கியமானது.

### 4. குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது

அக்ரூட் பருப்பில் கரையக்கூடிய மற்றும் கரையாத நார்ச்சத்து நிறைந்துள்ளது. இது ஆரோக்கியமான குடலுக்குப் பங்களிக்கும் ஃபைபர் வழக்கமான குடல் இயக்கங்களை ஆதரிக்கிறது. நன்மை பயக்கும் குடல் பாக்டீரியாக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. மேலும் மலச்சிக்கல் மற்றும் டைவர்டிகுலர் நோய் போன்ற இரைப்பை குடல் நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

### 5. இருதய ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது

அக்ரூட் பருப்புகள் பெரும்பாலும் இதய ஆரோக்கியமான உணவாகவும், நல்ல காரணத்திற்காகவும் கூறப்படுகின்றன. அவை ஓமேகா -3 கொழுப்பு அமிலங்கள், ஆக்ஸிஜனேற்றிகள் மற்றும் உதவக்கூடிய பிற தாவரக் கலவைகளில் செறிவூட்டப்பட்டுள்ளன.

- கொலஸ்ட்ரால் அளவு குறையும்.
- இரத்த நாளங்களின் செயல்பாட்டை மேம்படுத்தவும்
- இதய நோய்க்கான முக்கிய காரணியான வீக்கத்தைக் குறைக்கவும்

வழக்கமான வால்நட் நுகர்வு இருதய நோய் மற்றும் தொடர்புடைய சிக்கல்களின் அபாயத்தைக் குறைப்பதோடு இணைக்கப்பட்டுள்ளது.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

## கணவருக்கு 30 வருட குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை & அக்காவிற்குக் குடலிலிருந்த கட்டி மறைந்தது!

என்னுடைய கணவர் 30 வருடங்களாகக் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார். நான் ஆசீர்வாதம் டிவியைத் தினமும் பார்த்துக் கொண்டேயிருப்பேன். அதில் வரும் செய்திகள், பாடல்கள் மற்றும் ஸ்தோத்திரபலி எல்லாவற்றையும் பார்ப்பேன். அதில் சாட்சி வேளையில் நிறைய பேர் சாட்சி சொல்லுவார்கள். அதைப் பார்த்து என் வாழ்க்கையிலும் அற்புதம் நடக்காதா? என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். இயேசப்பா, "என்னுடைய கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றால் நான் சாட்சி சொல்லுவேன்" என்று பொருத்தனைப்பண்ணி ஜெபித்தேன். ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் ஜெபிக்கும்போது, "உங்களுடைய கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று கதறி அழுகிறீர்கள். கர்த்தர் விடுதலையைக் கொடுப்பார்" என்று சொன்னார்கள். அதன்படி, கர்த்தர் என்னுடைய கணவருக்குக் குடிப்பழக்கத்திலிருந்து பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். இப்பொழுது 3 மாதங்களாகக் குடிப்பதே இல்லை. மேலும், என்னுடைய அக்காவிற்குக் கடந்த வருடம் குடலில் கட்டி இருந்தது. கடந்த வருடம் நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபிக்கும்போது, "குடலிலுள்ள கட்டி மறைகிறது" என்று சொன்னார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெபித்து ஜெப எண்ணெய் வாங்கிக் கொண்டு சென்றேன். மருத்துவமனையில் சேர்த்ததால் அங்கு சென்று ஜெப எண்ணெயைப் பூசி ஜெபித்தேன். குடலில் இருந்த கட்டி மறைந்தது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# ஊழியங்களில் கர்த்தர் செய்த கிரியைகள்!

GLORY TO GOD!

# நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்!

## சென்னை உபவாசக் கூட்டம் 25.7.2026

வெளியே அமர்ந்திருந்த தேவப்பிள்ளைகள்

ஒவ்வொரு மாதமும் சென்னையில் நடைபெறுகிற ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் திரளான ஜனங்கள் கலந்து கொண்டு, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

# GLORY TO GOD!

# நமது ஊழியங்களில் கர்த்தரின் கிரியைகள்!

## கல்லீரலில் கேன்சர் கட்டி இல்லை என ரிப்போர்ட் வரக் கிருபை செய்தார்!

கடந்த வருடம் என்னுடைய அப்பாவிற்கு ஆப்ரேஷன் பண்ணினார்கள். ஆப்ரேஷன் பண்ணின பின்பு ஸ்கேன் பண்ணிப் பார்த்தபோது கல்லீரலில் கட்டி இருக்கிறது என்று சொன்னார்கள். அது கேன்சர் கட்டிபோல் இருக்கிறது என்று டாக்டர்கள் சொன்னார்கள். கேன்சர் டெஸ்ட் எடுக்கும்போது glue ஒட்டியிருந்தால் கேன்சர் கட்டிதான் என்று சொல்லிவிட்டார்கள். 50% கேன்சர் கட்டிதான் என்று சொன்னார்கள். கடந்த மே மாதம் நான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். “என்னுடைய அப்பாவிற்குக் கட்டி மறைந்தால் நான் சாட்சி சொல்லுவேன்” என்று பொருத்தனைப்பண்ணி அழுது ஜெபித்தேன். என்னுடைய அப்பா இரட்சிக்கப்படவில்லை. என்னுடைய அப்பாவிற்கு Liverஐ எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய அப்பா வயதானவர்களானதால் மூச்சு விடக் கஷ்டப்படுவார்கள் என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஜூன் மாதம் ஆப்ரேஷன் பண்ணப்போகும் முன்பு இயேசப்பா, “எனக்குப் பயமாக இருக்கிறது. என்னோடு இருந்து என்னைப் பெலப்படுத்துங்கள்” என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். அந்த நேரத்தில் ஜெப உதவியைத் தொடர்பு கொண்டு ஜெபித்தேன். அந்தச் சகோதரியும் ஜெபிக்கும்போது, “கர்த்தர் உங்கள் கண்ணீரைப் பார்க்கிறார். உங்களுக்குக் கிரியைச் செய்து விட்டார் என்று நம்பி கர்த்தருக்கு நன்றி சொல்லுங்கள்” என்று சொல்லி ஜெபித்தார்கள். ஆப்ரேஷன் 4 மணி நேரம் நடக்கும் என்று சொன்னார்கள். ஆனால் 2 மணி நேரத்திற்குள் ஆப்ரேஷன் முடிந்தது. பிறகு செக் பண்ணிப் பார்க்கும் போது கேன்சர் கட்டியே இல்லை என்று டாக்டர்கள் சொன்னார்கள். கர்த்தர் என்னுடைய அப்பாவிற்கு பெரிய அற்புதத்தைச் செய்தார். மேலும் இந்த வருடம் வாக்குத்தத்த வசனம் ‘கீர்த்தியும் புகழ்ச்சியுமாய் வைப்பேன்’ என்ற வசனத்தின்படி என்னுடைய மகளுடைய பள்ளியில் 7 கிளைப் பள்ளியிலும் ஒரு பிள்ளையைத் தேர்ந்தெடுத்து சிறந்த மாணவி என்று மெடல் கொடுப்பார்கள். அதில் இந்த வருடத்தில் என் மகளை தேர்ந்தெடுத்து மெடல் கொடுத்தார்கள். கர்த்தர் என்னுடைய மகளுக்கு பெரிய அற்புதத்தைச் செய்தார். எங்கள் குடும்பத்தைக் கர்த்தர் கீர்த்தியும் புகழ்ச்சியுமாய் வைத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி பரிமளா, வடபழனி.

## 20 வருட பில்லி சூனியக் கட்டிலிருந்து விடுதலை!

எங்களுக்கு 20 வருடங்களாக இடம் கிடைக்காமல் இருந்தது. எங்களுடைய குடும்பத்தில் யாரும் உயிரோடு இருக்கக் கூடாது என்று மாந்திரீகம் வைத்தார்கள். என்னுடைய தோழி கடந்த வருடம் ஆசீர்வாதப் பெருவிழாவிற்கு என்னை அழைத்து வந்தார்கள். நானும் வந்து கலந்துகொண்டு ஜெபித்துச் சென்றேன். அதிகமாகச் சூனியம் செய்ததால் பலவித போராட்டங்களைச் சந்தித்தோம். நான் அதிகாலையில் ஜெபிக்கும்போது, பில்லி சூனியக் கட்டுகள் எல்லாவற்றையும் கர்த்தர் எனக்குத் தரிசனமாகக் காண்பித்தார். எல்லா மாந்திரீகத்தையும் மேற்கொள்ளுவதற்குக் கர்த்தர் எனக்கு உதவி செய்தார். என்னுடைய தோழியும் உன்னுடைய இடத்தை நீ விட்டுக் கொடுக்காதே என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் ஜெபிக்கும்போது, “உங்களுடைய இடம் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது. நீங்கள் அதை விடாதீர்கள்” என்று சொன்னார்கள். நானும் சேர்ந்து ஜெபித்தேன். அதேபோல் என்னுடைய இடம் எனக்குக் கிடைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி மணிமேகலை, சிதம்பரம்

## 30 வருட வீசிங் பிரச்சனை நீங்கியது!

எனக்கு 30 வருடங்களாக வீசிங் பிரச்சனை இருந்தது. நான் நிறைய மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுத்தும் குணமாகவில்லை. புகை வைத்தும் சரியாகவில்லை. நரம்பு ஊசி போட்டும் குணமாகவில்லை. ஆசீர்வாதப் பெருவிழாவிற்கு வரும்போது கூட இளைப்பு இருந்தது. சகோதரன் ஜெபிக்கும்போது, “நுரையீரல் சம்பந்தமான பிரச்சனையெல்லாம் கர்த்தர் நீக்குகிறார்” என்று சொன்னார்கள். அப்பொழுதே வீசிங் பிரச்சனை நீங்கியது. இப்பொழுது நன்றாக மூச்சு விட முடிகிறது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி உஷா ராணி, விருகம்பாக்கம்.

## கர்ப்பப்பையில் இருந்த கட்டிகள் அதிசயமாய் மறைந்தன!

2025ல் ஜனவரி மாதம் ஸ்கேன் பண்ணும்போது கர்ப்பப்பையில் கட்டி இருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஆப்ரேஷன் பண்ணாமலேயே கட்டி மறைய வேண்டும் என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தேன். ஜூன் மாதத்தில் மறுபடியும் ஸ்கேன் பண்ணும்போது 2 கட்டிகள் இருக்கிறது என்று சொன்னார்கள். இயேசப்பா ஒரு கட்டி, இரண்டு கட்டியாக மாறியிருக்கிறதே என்று ஜெபித்தேன். தினமும் நான் ஜெபஎண்ணெயை வயிற்றில் பூசி ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். 2026 ஜனவரி மாதம் மருத்துவமனைக்குச் சென்று ஸ்கேன் பண்ணிப் பார்க்கும்போது கட்டி எதுவும் இல்லை என்று சொன்னார்கள். கர்த்தர் கட்டிகள் மறையக் கிருபை செய்தார். மேலும், எனக்குத் தொண்டையில் தைராய்டு கட்டி இருந்ததால் ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். கர்த்தர் அந்தக் கட்டியையும் மறையச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## குடும்பமாக இரட்சித்தார் தேவன்!

என்னுடைய கணவர் மற்றும் 2 பிள்ளைகள் இரட்சிக்கப்படவில்லை. நான் 10 வருடங்களாக ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து கொண்டிருக்கிறேன். ஆனால் முன்பு என்னுடைய கணவர் என்னைக் கூட்டத்திற்கு வர விடமாட்டார். வேதத்தைப் படிக்கவும் விடமாட்டார். நான் ஒவ்வொரு மாதமும் உபவாசக் கூட்டத்திற்கு வந்து கலந்துகொண்டு இயேசப்பா, “என்னுடைய குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட வேண்டும். நாங்கள் சாட்சியாக நிற்க வேண்டும்” என்று ஜெபித்துச் செல்வேன். அதே போல் கடந்த ஏப்ரல் மாதம் ஈஸ்டர் அன்று 3 பேரும் ஞானஸ்நானம் எடுக்கக் கர்த்தர் கிருபை செய்தார். மேலும் எனக்கு 6 மாதங்களாக வேலை இல்லாமல் இருந்தது. 6 மாதமும் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து ஜெபித்துச் சென்றேன். கடந்த மாதம் எனக்கேற்றாற்போல அட்மினில் சூப்பர்வைசர் வேலை கிடைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். உதிரப்போக்கு பிரச்சனைகளையும் நீக்கிச் சுகமாக்கினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி செபிலா, திருவொற்றியூர்

## 26 வருடச் சர்ப்பத்தின் ஆவியிலிருந்து விடுதலை!

எனக்கு 26 வருடங்களாகச் சர்ப்பத்தின் போராட்டங்கள் இருந்தன. நான் சர்ப்பத்தைப் பார்த்துப் பயந்து கொண்டேயிருப்பேன். என் மூதாதையர் சாபம் என் குடும்பத்தில் உள்ளவர்கள் எல்லாரையும் அலைக்கழித்துக் கொண்டேயிருந்தது. ஆசீர்வாதப் பெருவிழாவின் முதல் நாள் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது “உலகத்தின் ஆவி ஓடுகிறது” என்று சொன்னார்கள். அப்பொழுதே சர்ப்பத்தின் ஆவி செத்துக் காய்ந்து கீழே விழுந்ததைப் பார்த்தேன். இரண்டாம் நாள் கூட்டம் ஆரம்பிக்கும் போது, “இனி ஒரு சாபமும் இராது” என்ற வசனத்தைச் சொல்லி ஜெபித்து உட்கார்ந்தேன். சகோதரன் செய்தி கொடுக்கும்போதும் அதே வசனத்தைச் சொல்லி ஜெபித்தார்கள். சகோதரன் சொல்லும்போது கர்த்தருடைய மகிமையை உணர்ந்தேன். நானும் கண்ணீரோடு ஜெபித்தேன். கர்த்தர் சர்ப்பத்தின் ஆவி போராட்டத்திலிருந்து பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## அல்சர் வியாதி சுகமானது!

எனக்கு 7 மாதங்களாக அல்சர் மற்றும் வயிற்றில் எரிச்சல் பிரச்சனை இருந்தது. வாயெல்லாம் புண்ணாக இருந்தது. ஆசீர்வாதப் பெருவிழாவின் 2ஆம் நாள் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது, “தொண்டை, வாய், வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதியில் உள்ள அசுத்த ஆவி வெளியேறுகிறது” என்று சொன்னார்கள். அதன்படி அசுத்த ஆவியினுடைய கிரியை என்னை விட்டு நீங்கினதை உணர்ந்தேன். வாய்ப்புண் மற்றும் வயிற்றுப்புண் எதுவும் இல்லை. இப்பொழுது நன்றாக இருக்கிறேன். கர்த்தர் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## மகளுக்கு நாக்கின் அடியில் இருந்த சதை மறைந்தது!

என் மகளுக்கு 2024ல் நாக்கிற்கு அடியில் சதைபோல் வளர்ந்திருந்தது. சிறுவயதில் ஐஸ்கட்டி நிறைய சாப்பிட்டதால் இப்படி வந்தது. மருந்து மாத்திரைச் சாப்பிட்டும் சரியாகவில்லை. மருத்துவமனைக்குச் சென்று பார்த்த போது ஆப்ரேஷன் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். நாக்கிற்கு அடியில் 7 தையல் போட்டு ஆப்ரேஷன் பண்ணினால்தான் மறுபடியும் சதை வளராமல் இருக்கும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். என்னுடைய மகளும் அழுது கொண்டேயிருந்தாள். நானும் இயேசப்பா, “நீங்கதான் உதவி செய்ய வேண்டும்” என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். நான் மாதந்தோறும் நடக்கும் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்வேன். ஆசீர்வாதம் டிவியில் சகோதரர் ஜெபிக்கும்போது, “நாக்கில் உள்ள சதையெல்லாம் மறைகிறது” என்று சொன்னார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெபித்து கொண்டேயிருந்தேன். மறுநாள் ஆப்ரேஷன் பண்ணப்போகவில்லை. ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு பொருத்தனைப்பண்ணி ஜெபித்தேன். இயேசப்பா, “என் மகளுக்குச் சுகம் தாருங்கள்” என்று விசுவாசத்தோடு 2000 ரூபாய் காணிக்கைச் செலுத்திவிட்டுச் சென்றேன். நான் தினமும் ஜெப எண்ணெயைப் பயன்படுத்தி ஜெபித்து வந்தேன். 3 மாதங்கள் கழித்து உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபிக்கும்போது, “நாக்கில் உள்ள சதையெல்லாம் மறைகிறது” என்று சொன்னார்கள். என் மகளை விசுவாசமாக அறிக்கையிடக் கூறினேன். அவளும் "I Believe..." என்ற பாடலைப் பாடிக் கொண்டே சதை மறைய வேண்டும் என்று விசுவாசத்தோடு ஜெபித்தாள். அந்த நேரமே நாக்கிற்கு அடியில் உள்ள சதை முழுவதும் பட்டுப்போய்க் கருப்பாக மாறியது. பிறகு நாக்கிற்கு அடியில் சதை இருந்த இடமே தெரியாமல் மறைந்தது. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது எப்படிச் சரியானது என்று டாக்டர்கள் ஆச்சரியத்தோடு கேட்டார்கள். ஆப்ரேஷன் இல்லாமல் சதை மறையக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி ஜெயலதா, வண்ணாரப்பேட்டை.

## பூச்சி கடித்த ஸ்கின் அலர்ஜி சுகமானது!

நான் கார்ப்ரேஷனில் வேலை பார்க்கிறேன். நான் வேலை செய்யும்போது விஷப்பூச்சிக் கடித்து ஸ்கின் அலர்ஜிபோல் வந்து புண்ணாகி விட்டது. நான் ஒன்றரை வருடங்களாக எல்லா மருத்துவமனைக்குச் சென்று பார்த்தும் பயனில்லாமல் இருந்தது. சரியாகும்; பிறகு திரும்பவும் புண்ணாகிவிடும். இவ்வாறு ஸ்கின் அலர்ஜியினால் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன். நான் ஆசீர்வாதப் பெருவிழாவில் volunteerயாகப் பணிபுரிந்தேன். இரண்டாம் நாள் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது, “விஷப்பூச்சிக் கடித்தவர்களைக் கர்த்தர் சுகமாக்குகிறார்” என்று சொன்னார்கள். அன்றைக்கே புண் ஆறிவிட்டது. உடனே அந்த இடம் உலர்ந்து பட்டுப் போய்விட்டது. என்னால் மருந்து மாத்திரை தினமும் சாப்பிடாமல் இருக்கவே முடியாது. இப்பொழுது எந்த மாத்திரை மருந்தும் சாப்பிடாமல் நன்றாக இருக்கிறேன். கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோ. ஜானி

## நுரையீரலில் சுகம் கொடுத்தார்!

எனக்கு நுரையீரலில் இடது பக்கத்தில் நீர்க் கோர்த்து இருந்தது. இதனால் மிகவும் வலி அதிகமாக இருக்கும். மருத்துவமனைக்குச் சென்று ஸ்கேன் பண்ணிப் பார்க்கும்போது மருந்து மாத்திரை சாப்பிட வேண்டும் என்று சொன்னார்கள். இந்த வருடம் நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவின் முதல் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபிக்கும்போது, “நுரையீரலில் பிரச்சனை இருக்கிறவர்களை ஆண்டவர் இப்பொழுது தொடுகிறார். கர்த்தருடைய வார்த்தைப் பரத்திலிருந்து இறங்கி வருகிறது” என்று சொன்னார்கள். நானும் விசுவாசத்தோடு ஜெபித்தேன். இப்பொழுது நன்றாக இருக்கிறேன். கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி விமலா, அயனாவரம்

## 2 வருடங்கள் தடைபட்ட வாரிசு சான்றிதழ் கிடைத்தது!

என்னுடைய கணவர் இறந்து விட்டார். என்னுடைய கணவருடைய சொத்து முழுவதும் மகனுக்கு வரவேண்டும். அதற்கான வாரிசு சான்றிதழ் வாங்குவதற்கு 2 வருடங்களாகத் தடை இருந்தது. நான் ஆசீர்வாதப் பெருவிழாவின் முந்தைய நாளில் இயேசப்பா, “வாரிசு சான்றிதழ் கிடைக்க வேண்டும். நாளைய தினத்தில் ஆசீர்வாதப் பெருவிழாவிற்கு வந்து சாட்சி சொல்லுவேன்” என்று ஜெபித்தேன். அன்றைக்கே 6.30 மணிக்கு வாரிசு சான்றிதழ் கிடைக்கக் கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை! மேலும் 2 மாதத்திற்கு முன்பு நுரையீரலில் சளி அடைத்திருந்ததால் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்தேன். நெஞ்சு எரிச்சலால் எதுவும் சாப்பிட முடியாது. அப்பொழுது ஆசீர்வாதம் டிவியில் சகோதரன் அவர்கள் ஜெபிக்கும்போது, “நெஞ்சு எரிச்சல் மற்றும் அல்சர் உள்ளவர்களுக்குக் கர்த்தர் சுகத்தைக் கொடுக்கிறார்” என்று சொன்னார்கள். நானும் சேர்ந்து ஜெபித்தேன். அடுத்த நாளிலிருந்து நெஞ்சு எரிச்சல் இல்லை. நான் நன்றாகச் சாப்பிட்டேன். கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## அலர்ஜி நீங்கியது!

என்னுடைய மகளுக்கு 3 நாட்களாகக் கையில் பூச்சிக் கடித்தது போல் அலர்ஜியாக இருந்தது. ஆசீர்வாதப் பெருவிழாவின் 2ஆம் நாள் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது, “பூச்சிக் கடித்ததுபோல் யாருக்கெல்லாம் அலர்ஜி இருக்கிறதோ அவர்களைக் கர்த்தர் சுகமாக்குகிறார்” என்று சொன்னார்கள். மறுநாள் பார்க்கும்போது அந்த அலர்ஜியினால் வந்த தடிப்பே தெரியாதது போல் மறைந்தது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## மூலவியாதி சுகமானது!

எனக்கு ஒரு மாதமாக மூலப் பிரச்சனை இருந்தது. இதனால் இரத்தமாக வரும். ஆசீர்வாதப் பெருவிழாவின் முதல் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபிக்கும்போது, “மூல வியாதியினால் அவதிப்படுகிறீர்கள். அடிவயிற்றில் பிரச்சனையோடு வந்திருக்கிறவர்களைக் கர்த்தர் சுகமாக்குகிறார்” என்று சொல்லி ஜெபித்தார்கள். அன்றிரவே வலி எல்லாம் நீங்கியது. இப்பொழுது இரத்தம் வரவில்லை. கர்த்தர் மூலவியாதியிலிருந்து பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி அமுலு, கோடம்பாக்கம்.

## கணவருக்கு 25 வருடக் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை!

என்னுடைய கணவர் 25 வருடங்களாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார். நான் தினமும் ஆசீர்வாதம் டிவியைப் பார்த்து மாதந்தோறும் நடக்கும் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்துகொண்டு கண்ணீரோடு ஜெபித்தேன். இப்பொழுது 5 வருடங்களாக என்னுடைய கணவர் குடிப்பதே இல்லை. கர்த்தர் என் கணவருக்குப் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டவதாக!

## 4 மாதப் படுக்கையை மாற்றினார்!

நான் 4 மாதங்களாகப் படுத்த படுக்கையாக இருந்தேன். நான் தினமும் ஆசீர்வாதம் டிவியைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். எனக்கு எலும்பு, நரம்பு முழுவதும் வலி இருந்தது. இதனால் நடக்கவே முடியாமல் இருந்தேன். என்னால் கொஞ்ச நேரம் கூட நிற்கவோ உட்காரவோ முடியாது. ஆசீர்வாதப் பெருவிழாவின் 2ஆம் நாள் கூட்டத்தில் நான் பெல்ட் போட்டுக்கொண்டு தான் வந்தேன். இரண்டாம் நாள் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டது. இன்று பெல்ட் போடாமல் உட்கார்ந்திருக்கிறேன். என்னால் நன்றாக நடக்க முடிகிறது. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி அமிர்தா, விழுப்புரம்.

நமது ஆசீர்வாதம் டிவி ஊழியங்கள் மூலமாக அநேகர் குழந்தைபாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் என்ற வார்த்தையின்படி அநேகர் கர்ப்பத்தின் கனியைப் பெற்றிருக்கிறார்கள். அவற்றில் ஒரு சில சாட்சிகள்...

## கணவரின் தங்கைக்கு 14 வருடங்களுக்குப்பின்...

நாங்கள் ஆசீர்வாதத் திருச்சபையின் அங்கத்தினராக இருக்கிறோம். என்னுடைய கணவரின் தங்கைக்கு 14 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லை. ஆசீர்வாதத் திருச்சபைக்கு வந்து ஜெபிக்கச் சொன்னோம். அதன்படி ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு வந்து பொருத்தனைப்பண்ணி ஜெபித்தாள். கர்த்தர் அடுத்த வருடத்திலே குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## மகளுக்கு 13 வருடங்களுக்குப்பின்...

என்னுடைய மகளுக்கு 13 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்தது. நான் விருதுநகரில் நடந்த ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் என் மகளுக்கு ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். மேலும் என் மகனுக்குத் திருமணமாகாமல் தடையாக இருந்தது. கர்த்தர் தடைகளை நீக்கி திருமணம் நடக்கக் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## 11 வருடங்களுக்குப்பின்...

எனக்கு 11 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. நான் ஆசீர்வாதம் டிவியைத் தினமும் பார்ப்பேன். மருத்துவமனைக்குச் சென்று பார்த்த போது "குழந்தை பிறக்காது" என்று டாக்டர்கள் சொன்னார்கள். "எனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்றால் என் உயிரை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று அழுது ஜெபித்தேன். 2018ல் என்னுடைய தங்கையின் கணவர் மூலமாக ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபிக்கும்போது, "கர்ப்பத்தின் கனி திறக்கப்படுகிறது" என்று சொன்னார்கள். நானும் அந்த வார்த்தையை எனக்கென்று எடுத்து விசுவாசத்தோடு ஜெபித்துச் சென்றேன். மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை எடுத்தேன். கர்த்தர் எனக்கு குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார். இப்பொழுது 2 பிள்ளைகள் இருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## 9 வருடங்களுக்குப்பின்...

எனக்கு 9 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லை. நான் ஆசீர்வாதத் திருச்சபைக்குதான் வாரந்தோறும் வருவேன். ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு கண்ணீரோடு ஒவ்வொரு வாரமும் ஜெபித்துச் சென்றேன். எனக்குக் காலண்டர் கொடுத்தார்கள். அந்தக் காலண்டரில் 'நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்' என்ற வசனம் இருந்தது. அந்தக் காலண்டரை வாங்கிச் சென்ற மறுவருடமே எனக்கு அழகான ஆண் குழந்தையைக் கர்த்தர் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## மகளுக்கு 8 வருடங்களுக்குப்பின்...

என்னுடைய மகளுக்கு 8 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லை. நான் ஒவ்வொரு வருடமும் ஆசீர்வாதப் பெருவிழாவிற்கு வந்து அழுது ஜெபித்துச் செல்வேன். கடந்த வருடம் நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்துகொண்டு என் மகளுக்குக் குழந்தை பாக்கியத்திற்காக மனங்கசந்து அழுது ஜெபித்தேன். நாங்கள் விரும்பினதுபோல என் மகளுக்கு பெண் குழந்தை பிறக்கக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## 8 வருடங்களுக்குப்பின் 2வது குழந்தை!

என்னுடைய மகளுக்கு முதல் குழந்தை பிறந்து 8 வருடங்களாகியும் இரண்டாவது குழந்தை இல்லை. மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். கருத்தரிக்க வாய்ப்பு இல்லை என்று சொல்லி விட்டார்கள். கடந்த வருடம் நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டு ஜெபித்துச் சென்றேன். இந்த வருடம் கர்த்தர் அழகான ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## மகளுக்கு 4 வருடங்களுக்குப்பின்...

என்னுடைய மகளுக்கு 4 வருடங்களாகக் குழந்தை பாக்கியம் இல்லை. 2024ஆம் ஆண்டு நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டேன். சகோதரன் சகோதரி ஜெபிக்கும்போது சேர்ந்து ஜெபித்தோம். ஜெபத்தைக் கேட்டுக் கர்த்தர், அழகான ஆண் குழந்தையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி பவுலின் மேரி.

## 4 வருடங்களுக்குப்பின் குழந்தைபாக்கியம்

எங்களுக்கு 4 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்தது. குழந்தைக்காக எந்தச் சிகிச்சையும் எடுக்கவில்லை. 2025ஆம் ஆண்டு நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் சகோதரன் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்தார்கள். கர்த்தர் எங்களுக்குக் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!
– சகோதரி யாமினி, மாதவரம்.

## 4 வருடங்களுக்குப்பின்...

எனக்கு 4 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்தது. 2023ஆம் ஆண்டு நடந்த உபவாசக் கூட்டத்திற்கு வந்து கலந்துகொண்டு 'பாக்கியவதி' புத்தகத்தை விசுவாசத்தோடு வாங்கிச் சென்றேன். தினமும் அந்தப் புத்தகத்தைப் படித்துக் கொண்டேயிருந்தேன். 2025ஆம் ஆண்டு கர்த்தர் எனக்குப் பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## மகளுக்கு 3 வருடங்களுக்குப்பின்...

என் மகளுக்கு 3 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்தது. கடந்த வருடம் ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டேன். சகோதரன் ஜெபிக்கும்போது, "குழந்தை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு அடுத்த வருடமே சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தையைக் கர்த்தர் கட்டளையிடுகிறார்" என்று சொன்னார்கள். அதே போல் என் மகளுக்குச் சரீரத்தில் அநேகப் பிரச்சனைகள் இருந்தும் சுகப்பிரசவத்தில் ஆண் பிள்ளையைக் கர்த்தர் கொடுத்து ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## வலிப்பு வியாதி சுகமானது!

என்னுடைய மகளுக்குக் கடந்த ஜனவரி மாதம் காய்ச்சல் அதிகமாக இருந்தது. அதனால் வலிப்பு வந்து சுயநினைவு இல்லாமல் இருந்தாள். மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது நினைவு வந்தது. ஆனால் மறுபடியும் நினைவு இல்லாமல் போனது. "இயேசப்பா, என்னுடைய மகளுக்கு ஜீவனைத் தாருங்கள். நான் ஆசீர்வாதப் பெருவிழாவில் சாட்சி சொல்லுவேன்" என்று ஜெபித்தேன். இப்பொழுது என்னுடைய மகள் நன்றாக இருக்கிறாள். கர்த்தர் என் மகளுக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – சகோதரி வசந்தி,ராணிப்பேட்டை.

## 20 வருடங்கள் குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருந்த மகனுக்கு விடுதலை கொடுத்தார்!

நாங்கள் 2019ல் ஆசீர்வாதம் டிவி மூலமாக இரட்சிக்கப்பட்டோம். வருடந்தோறும் நடக்கும் ஆசீர்வாதப் பெருவிழாவில் தவறாமல் கலந்து கொள்வேன். கர்த்தர் அநேக அற்புதங்களை எங்கள் வாழ்க்கையில் செய்திருக்கிறார். 20 வருடங்களாகக் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்த என் மகனைக் கர்த்தர் குடியிலிருந்து விடுதலையாக்கினார். என்னுடைய மகனுக்குத் திருமணமாகாமல் தடையாகவே இருந்தது. கர்த்தர் திருமணத்தையும் நேர்த்தியாய் நடத்தி, குழந்தையும் கொடுத்து இரட்டிப்பான நன்மைகளைச் செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!
– சகோதரி சாந்தி, பாண்டிச்சேரி

## புகைப்பிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலை & பிரிந்த குடும்பம் இணைந்தது!

நான் 20 வருடங்களுக்குமேல் குடும்பப் பிரச்சனைக் காரணமாகச் சிகரெட் பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தேன். என்னுடைய குடும்பம் 2018ல் பிரிந்து போனது. நான் 2019 முடிவில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்தேன். என்னுடன் மருத்துவமனையில் சேர்ந்தவர்கள் எல்லாரும் இறந்து விட்டார்கள். நான் மட்டும் பிழைத்தேன். கொரோனா காலக்கட்டத்தில் வீட்டிலே இருக்கும்போது ஆசீர்வாதம்டிவி தான் பார்த்துக் கொண்டேயிருந்தேன். சகோதரன் சகோதரி செய்தி மிகவும் என்னைத் தொட்டது. இப்பொழுது நான் 3 வருடங்களாகச் சிகரெட் பிடிப்பதே இல்லை. என்னுடைய மனைவியும் என்னுடன் சேரக் கர்த்தர் கிருபை செய்தார். நாங்கள் இப்பொழுது குடும்பமாக இருக்கிறோம். கர்த்தர் எனக்குப் புகைப் பிடிக்கும் பழக்கத்திலிருந்து பூரண விடுதலை கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## மகளுக்குக் கட்டியைச் சுகமாக்கினார்!

என்னுடைய இரண்டாவது மகளுக்குத் திடீரென்று வாய் பகுதியில் கட்டி வந்தது. தானாகவே குணமாகிவிடும் என்று விட்டு விட்டேன். ஆனால் என்னுடைய மகள் பல் முழுவதும் கூசுகிறது என்று சொன்னாள். பிறகு மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது அது கேன்சர் கட்டிபோல இருப்பதால் கட்டியை எடுக்க வேண்டும் அல்லது எல்லாப் பல்லும் போய்விடும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். கடந்த வருடம் நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டு அழுது ஜெபித்தேன். அந்தக் கட்டி இருந்த இடத்தில் உள்ள பல்லை எடுத்து விட்டார்கள். இப்பொழுது எந்தப் பிரச்சனையும் இல்லை. கேன்சர் கட்டி இல்லை என்று டாக்டர்கள் சொன்னார்கள். மறுபடியும் ஸ்கேன் பண்ணிப் பார்க்கும்போது இனி கேன்சர் கட்டியே வராது என்று சொன்னார்கள். கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## 30 வருட வீசிங் பிரச்சனையை மாற்றினார்!

எனக்கு 30 வருடங்களாக வீசிங் பிரச்சனை இருந்தது. எத்தனையோ மருத்துவமனைக்குச் சென்று பார்த்தும் பயனில்லாமல் இருந்தது. ஆசீர்வாதப் பெருவிழாவின் முதல் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். அன்று இரவிலிருந்து வீசிங் பிரச்சனையே இல்லை. நிம்மதியாகத் தூங்குகிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## கணவருக்கு 25 வருடக் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை! பிரிந்த குடும்பம் இணைந்தது!

எனக்குத் திருமணமாகி 18 வருடங்களாகிறது. என்னுடைய கணவர் 25 வருடங்களாகக் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருந்தார். குடித்து வீதியில் படுத்து இருப்பார். அதனால் நான் திருமணமாகி 2 மாதத்தில் அம்மா வீட்டிற்குச் சென்று விட்டேன். 13 வருடங்களாகப் பிரிந்து இருந்தோம். என்னுடன் வேலை பார்க்கிறவர்கள் தான் என்னை ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். நானும் வந்து கலந்து கொண்டேன். எனக்கு ஜெபிக்கத் தெரியாததினால் எனக்கு ஏன் இந்த நிலை என்று அழுது கொண்டேயிருந்தேன். அப்பொழுது சகோதரன் மூலமாகக் கர்த்தர் பேசினார். “கலங்கி நிற்கிற நீ கலங்காதே, உன் வாழ்க்கை கட்டப்படும். நீ ஹெப்சிபா என்றும், பியூலா என்றும் அழைக்கப்படுவாய்” என்று கர்த்தர் சொன்னார்கள். நானும் தினமும் அந்த வார்த்தையைச் சொல்லி ஜெபித்தேன். என்னுடைய அத்தை என்னை வீட்டிற்கு அழைத்தார்கள். என்னுடைய கணவர் மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தார்கள். அவரையும் சேர்த்து உபவாசக் கூட்டத்திற்கு அழைத்துக் கொண்டு வந்தேன். நாங்கள் இருவரும் கையைப் பிடித்து ஜெபித்தோம். அப்பொழுது எங்களை விட்டு ஏதோ ஒன்று வெளியே போனதுபோல் இருந்தது. அன்றிலிருந்து அவர் குடிப்பதே இல்லை. இப்பொழுது 7 வருடங்களாக என்னுடைய கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று நன்றாக இருக்கிறார். வேலைக்கும் செல்கிறார். எங்களுக்கு அழகான பெண் குழந்தையும் பிறந்துள்ளது. எங்களுடைய வாழ்க்கையைக் கட்டுவதற்குக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி பாண்டியம்மாள், வெஸ்ட் சைதாப்பேட்டை

## தடையை நீக்கி வீட்டைக் கட்ட உதவி செய்தார்!

நான் ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்திற்கு தொடர்ந்து வந்துகொண்டு இருக்கிறேன். நான் 2022ல் வீடு கட்ட ஆரம்பித்தேன். ஆனால் மாந்திரீகப் போராட்டத்தினிமித்தம் வீடு கட்டி முடிக்க முடியாமல் தடையாக இருந்தது. வீட்டிற்குத் தளம் மட்டும் போட்டிருந்தோம். வேறு எந்த வேலையும் செய்ய முடியாமல் இருந்தது. எனக்கு வீடு கட்ட எந்தப் பக்கமும் உதவி இல்லாமல் எல்லாவற்றையும் இழந்து விட்டேன். இந்தச் சூழ்நிலையில்தான் நான் கடந்த வருடத்தில் முதன்முறையாக ஆசீர்வாதப் பெருவிழாவில் கலந்து கொண்டேன். இயேசப்பா, "உங்களால் மட்டுமே இதைச் செய்ய முடியும்" என்று அழுது ஜெபித்துச் சென்றேன். கர்த்தருடைய கிருபையினால் ஜுன் மாதம் பாதியிலிருந்த வீட்டைக் கட்ட ஆரம்பித்தேன். அக்டோபர் மாதம் வீட்டைப் பிரதிஷ்டைப் பண்ணக் கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தர் பெரிய அற்புதத்தைச் செய்தார். மாந்திரீக தடையைக் கர்த்தர் நீக்கி விட்டார். இங்கு வந்து ஜெபித்த ஒரு மாதத்திலே முடிக்க முடியாமல் இருந்த வீட்டைக் கட்டி முடிக்கக் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோதரி சத்தியபிரியா, தரமணி

## குழந்தை பாக்கியம் தந்தார்!

ஒவ்வொரு வருடமும் நான் ஆசீர்வாதப் பெருவிழாவிற்கு வந்து ஜெப விண்ணப்பம் எழுதிக் கொடுத்துச் செல்வேன். அடுத்த வருடம் ஆசீர்வாதப் பெருவிழா வருவதற்கு முன்பு கர்த்தர் அந்த விண்ணப்பத்தை நிறைவேற்றி விடுவார். அதே போல் நான் கடந்த 2024ஆம் ஆண்டு நடந்த ஆசீர்வாதப் பெருவிழாவில் வந்து குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்துச் சென்றேன். ஜெபத்தைக் கேட்டுக் கர்த்தர் கடந்த வருடம் நான் கர்ப்பந்தரிக்க கிருபை செய்தார். இந்த வருடத்தில் கர்த்தர் குழந்தையோடு ஆசீர்வாதப் பெருவிழாவிற்கு வந்து கலந்து கொள்ளக் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## 75 லட்ச ரூபாய்க் கடனை அடைக்கக் கிருபை செய்தார்!

நான் வேலை பார்க்கும் இடத்தில் நிறைய போராட்டங்கள் இருந்தன. நான் வேலையில் சேர்ந்து 6 மாதங்களானது. எனக்கு நல்ல வேலைக்காக ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். ஆசீர்வாதம் டிவியின் உபவாசக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, கர்த்தர் நல்ல வேலையைக் கொடுத்தார். என்னுடைய அப்பா இறந்து 2 வருடங்களாகிறது. அதனால் 75 லட்சம் ரூபாய் கடன் பிரச்சனை இருந்தது. இந்த 2 வருடத்திற்குள் 75 லட்சம் ரூபாய்க் கடனை அடைக்கக் கர்த்தர் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோ. பிரசாந்த், தாம்பரம்.

## 16 வருட மாந்திரீகப் போராட்டத்திலிருந்து விடுதலை!

நான் 16 வருடங்களாக மாந்திரீகப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டு இருந்தேன். மாந்திரீகப் பிரச்சனையினால் மிகவும் அவதிப்பட்டேன். மனக்குழப்பங்கள் மற்றும் போராட்டத்தோடு இருந்தேன். ஆசீர்வாதப் பெருவிழாவின் முதல் நாள் கூட்டத்தில் சகோதரன் ஜெபிக்கும்போது ஆவியானவர் எனக்குள் இறங்கினதை உணர்ந்தேன். ஒரு நிழல் போன்ற உருவம் என்னை விட்டு விலகினதை உணர்ந்தேன். என் பெலவீனமெல்லாம் நீங்கி மனத்தெளிவு கிடைத்தது. அஜீரணக் கோளாறு எல்லாம் நீங்கியது. இப்பொழுது நன்றாக இருக்கிறேன். கர்த்தர் மாந்திரீகப் போராட்டத்திலிருந்து பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– சகோ. அன்பன்

## 2 வருட நெஞ்சு வேதனை சுகமானது!

நான் 6ஆம் வகுப்பு படிக்கிறேன். எனக்கு 2 வருடங்களாக நெஞ்சு வலி இருந்தது. நான் நின்று கொண்டிருந்தால் கூட நெஞ்சு வலிக்கும். ஆசீர்வாதப் பெருவிழாவின் 3ஆம் நாள் கூட்டத்தில் அங்கிள் ஜெபிக்கும்போது சேர்ந்து ஜெபித்தேன். இப்பொழுது நெஞ்சு வலியே இல்லை. நான் நின்று கொண்டிருந்தாலும், நடந்தாலும், குதித்தாலும் நெஞ்சு வலியே இல்லை. கர்த்தர் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! – யாபேஸ்.

# கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது

"கிழக்கிலும், மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்," - சங்கீதம் 75:6,7

பிரியமானவர்களே, எனக்கு அந்தத் தேசத்திலிருந்து ஜெயம் வந்துவிடுமா? இல்லை இந்த ஊரிலிருந்து ஜெயம் வருமா? என அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். ஜெயமோ கர்த்தரால் வரும்.

"குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்." - நீதி. 21:31.

தேர்வில் மாத்திரம் அல்ல, உங்கள் வாழ்க்கையிலும் மேன்மையும், உயர்வும் அவசியமாயிருக்கிறது. கர்த்தரிடத்திலிருந்து மாத்திரமே ஜெயம் வரும். தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார். கர்த்தர்தான் ஒருவனைத் தாழ்த்துகிறார். ஒருவனை உயர்த்துகிறார்.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், பரிசுத்தரின் அறிவே அறிவு." - நீதி.9:10. "கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை." - நீதி. 15:33. "தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்." - நீதி. 22:4.

சகோதரி சோபியா ஆலன்பால்

தாழ்மையும் கர்த்தருக்குப் பயப்படுதலும் ஒவ்வொரு தேவப்பிள்ளைக்கும் இருக்க வேண்டியது அவசியம்! வாழ்க்கையில் மேன்மை அடையவேண்டும். உயர்வடைய வேண்டும், நல்ல முன்னேற்றங்களைக் காண வேண்டும் என நீங்கள் எவ்வளவோ பிரயாசப் படுகிறீர்கள். எவ்வளவோ முயற்சி செய்கிறீர்கள். அது நல்லதுதான். ஆனால் அதனோடுகூட தாழ்மையும் கர்த்தருக்குப் பயப்படுதலும் உங்களுக்கு இருக்க வேண்டும். இதைக் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

கர்த்தருக்குப் பயப்படும் பயம் நமக்கு எப்பொழுதும்

இருக்க வேண்டும். மற்றொரு பக்கம் எப்பொழுதும் தாழ்மையோடு நடந்து கொள்ள வேண்டும்.

“நீ இஸ்ரவேல் என்கிற என் ஜனங்களுக்கு அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை நான் ஆட்டுமந்தையை விட்டு எடுத்து,”
- 2 சாமு. 7:8

ஆடுகளின் பின்பாக நடந்த தாவீதைக் கர்த்தர் பிரித்து எடுத்து, தம் ஜனத்தை நடத்தும்படியாகவும், ஆளும் படியாகவும் வைக்கிறார் என்றால் அது ஒரே நாளில் நடந்த காரியம் அல்ல.

ஒருவிசை சாமுவேல் பெத்லகேமுக்குப் போகிறார். சவுலைக் கர்த்தர் ராஜாவின் ஸ்தானத்திலிருந்து தள்ளிவிடுகிறார். அதற்கு மாற்றாக “என் இருதயத்திற்கு ஏற்ற மனிதரை நான் கண்டுபிடித்தேன். நீ பலியிடுவதற்குப் போவதைப்போல போய், அங்கே ஈசாயின் மகனை நீ அபிஷேகம் பண்ணு” என்று ஆண்டவர் அனுப்பினார்.

ஈசாய்க்கு எட்டு மகன்கள் இருந்தார்கள். சாமுவேல் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ஒரு பெரிய தேவனுடைய மனிதர். அவர் சொன்ன ஒரு சொல்லும் தவறாது. அது அப்படியே நடக்கும். அவர் அவ்வளவு பெரிய தீர்க்கதரிசி. அவரைக் கொண்டு கர்த்தர் தம்முடைய ஜனத்தை நடத்திக் கொண்டு வந்தார். அவர் தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல தேசத்திலும் சாமுவேல் தீர்க்கதரிசியின் பெயர் விளங்கியது. அவர் ராஜாக்களை அபிஷேகம் பண்ணுகிற தீர்க்கதரிசி. சாமுவேல் ஈசாயின் வீட்டுக்குப் போனார்.

2007ஆம் ஆண்டு கர்த்தர் எங்களை விருதுநகரிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டுப் போகச் சொன்னார். நாங்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றோம். எங்கள் பிள்ளைகள் சிறு பிள்ளைகளாக இருந்தார்கள். ஹேரீஸ் அப்பொழுது PreKG தான் படித்துக் கொண்டிருந்தான். நாங்கள் சகோதரன் D.G.S. தினகரன் அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் மூலமாகவும் தீர்க்கதரிசனம் வந்தது. அவர் சகோதரனைப் பார்த்து, “உன்னை ஆண்டவர் இந்தப் பட்டணத்திற்கு வரச் சொல்லுகிறார். நீ சென்னைக்கு வந்தபின்பு என்னிடம் சொல்லு. நான் உன் வீட்டிற்கு வந்து, உணவருந்த வேண்டும்” என்று சொன்னார்கள். அது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

நாங்கள் சென்னைக்கு வந்தவுடன் D.G.S. தினகரன் Uncleக்கு போன் பண்ணினோம். அப்பொழுது அவர் கட்டாயம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன் என்று ஒரு தேதியைக் கொடுத்தார்கள். அவர்கள் வருவேன் என்ற சொன்ன நாளில் நாங்களும் பிள்ளைகளும் நன்றாக ஆயத்தமாகி அவர்களை வரவேற்க ஆயத்தமாக இருந்தோம். அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து,

இரண்டு மூன்று மணி நேரங்கள் இருந்து, எங்களோடு பேசி, பின்பு எங்களுக்காக ஜெபம்பண்ணி, பிள்ளைகளின்மேல் கை வைத்து ஆசீர்வதித்து, பின்பு சாப்பிட்டு விட்டு புறப்பட்டுப் போனார்கள்.

இதைப்போலத்தான் சாமுவேல் ஈசாயின் வீட்டிற்கு வந்தபொழுது, அவர்கள் எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷமாக இருந்திருக்கும் அல்லவா! ஆனால் இதில் 8 பிள்ளைகளில் 7 பிள்ளைகள் மாத்திரம் வீட்டில் இருந்தார்கள். அவர்களிடம் ஈசாய் நீங்களெல்லாரும் நல்ல உடை உடுத்தி தயாராகுங்கள். சாமுவேல் ஐயா வரப்போகிறார் என்று சொல்லியிருந்திருப்பார். ஆனால் தாவீதிடம் நீ ஆடுகளைப் பார்த்துக்கொண்டு அங்கேயே இரு என்று சொல்லிவிட்டார். இப்பொழுது தாவீதினுடைய உள்ளம் எப்படியிருந்திருக்கும் பாருங்கள்!

இந்தக் காலத்தில் உங்கள் வீட்டில் இப்படி ஒரு சம்பவம் நடந்தால் எப்படியிருக்கும் பாருங்கள்! வீட்டில் பெரிய விருந்து நடக்கும்போது, பெரிய மனிதர் வீட்டிற்கு வரும்போது, ஒரு பிள்ளையை மட்டும் ‘‘நீ அங்கேயே இரு” என்று சொன்னால் அவர்கள் இருப்பார்களா?

ஆனால் தாவீது தாழ்மையுள்ளவராக இருந்தபடியினால், அவருடைய அப்பாவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வனாந்தரத்திலே இருந்துவிட்டார். தாவீதின் அப்பா ஒரு விசை தாவீதிடம் அவருடைய சகோதரர்களை விசாரித்து வரச் சொல்லி, அனுப்பியபோது, ஆடுகளை வேலைக்காரன் வசமாய் விட்டுவிட்டு, சகோதரர்களுக்குத் தின்பண்டங்களைக் கொடுத்து அனுப்பினார். அப்படியென்றால் ஆடுகளை வேறொருவர் வசம் விட்டுவிட்டு வீட்டிற்கு அழைத்து வர வாய்ப்பு உண்டு. ஆனால் தாவீது தன் குடும்பத்தாரால் அற்பமாக எண்ணப்பட்டார். அசட்டைப் பண்ணப் பட்டிருந்தார். ஆனால் கர்த்தர் தாவீதைத் தெரிந்துகொண்டார்.

கர்த்தருக்குப் பயப்படும் பயமும், தாழ்மையும் யாரிடம் இருக்கிறதோ, அவர்கள் எல்லோருக்கும் சிறுவயதிலிருந்தே ஒரு வித்தியாசம் காணப்படும். அவர்கள் வளர வளர வாழ்க்கையிலே மேன்மை அடைவதைப் பார்க்க முடியும்.

தாவீது ஒருவிசை கோலியாத்தை எதிர்த்துப் போனார். அது ஒரு திகிலான அனுபவம். 40 நாட்கள் பெலிஸ்தர் ஒரு

பக்கம் நின்றுகொண்டு இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் இஸ்ரவேலின் சேனைகள் நின்றுகொண்டு இருக்கிறது. ஒரே ஒரு கோலியாத் வந்து 40 நாட்களாக ஒவ்வொரு நாளும் சவாலிட்டுப் பேசிக் கொண்டேயிருந்தான். கர்த்தருடைய நாமத்தை தூஷித்துக் கொண்டேயிருந்தான். இஸ்ரவேலின் சேனைகள் பயந்து திகிலோடு இருந்தது.

தாவீது தன் கையில் ஒரே ஒரு

கவணோடு போனான். அவன் ஆடு மேய்க்கும்போது ஏதாவது மற்ற விலங்குகள் வந்தால், கல்லைக் கவணில் வைத்து எறிந்து ஆட்டுக்குட்டியைக் காப்பாற்றி வந்தான் தாவீது. எனக்குப் பட்டயம் வேண்டாம், ஈட்டி வேண்டாம். யுத்த ஆயுதங்கள் எதுவும் வேண்டாம். நான் கர்த்தருடைய நாமத்தினாலே போகிறேன் என்று சொல்லி, விசுவாசத்தோடுகூட சேனைகளின் கர்த்தருடைய நாமத்தில் வருகிறேன் என்று சொல்லி, ஒரே ஒரு கல்லை எடுத்துக் கவணில் வைத்து கோலியாத்தை நோக்கி எறிந்தார். அந்தக் கல் சரியாகக் கோலியாத்தின் நெற்றியில் பட்டது. அவன் முகங்குப்புற விழுந்தான். இது சாதாரண செயல் அல்ல. இது தாவீதுடைய செயல் அல்ல. இது தேவனுடைய கரம். அந்த நாளிலே அந்த இடத்திலே எல்லா ஜனங்களுக்கும் முன்பாகவும் கர்த்தர் தாவீதை மேன்மைப்படுத்தினார். தாவீதைக் கொண்டு பெரிய இரட்சிப்பை உண்டாக்க விரும்பினார். அப்பொழுது கூட தாவீதிடம் பட்டயம் இல்லை. அவன் வேகமாக ஓடிச் சென்று கோலியாத்தின் பட்டயத்தை எடுத்து, அதினாலேயே அவனைக் கொன்று போட்டான். அவனுடைய பட்டயத்தை எடுத்தே அவனைக் கொன்றுபோடும்படியாகச் செய்த கர்த்தருடைய செயலைப் பார்த்தால் எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது!

கிழக்கிலும், மேற்கிலும், வனாந்தர திசையிலுமிருந்து ஒருநாளும் நமக்கு ஜெயம் வராது. பரலோகத்திலிருந்து நமக்கு ஜெயம் வரும். “எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கின்றேன்” (சங்கீதம் 121:1) என்று எழுதியிருப்பதைப்போல கர்த்தருடைய பர்வதத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். ஜெயமோ கர்த்தரால் வரும்.

உங்கள் பிள்ளைகளுடைய படிப்பானாலும் சரி, வியாபாரமானாலும் சரி அல்லது உங்கள் வாழ்க்கையிலே எந்தக் காரியத்தைச் செய்து முன்னேற வேண்டும் என்று எண்ணுகிறீர்களோ, அதில் நீங்கள் தாழ்மையாக இருங்கள். கர்த்தருக்குப் பயந்து நடவுங்கள். ஜெயம் தேடி வரும். மேன்மை, உயர்வு தேடி வரும். அதில் சந்தேகமேயில்லை!

பல ஆண்டுகளுக்கு முன்பதாக ஒரு குடும்பத்தினர் மருத்துவம் படிக்கும் தன்னுடைய மகளுக்காக அவ்வப்போது எங்களைத் தேடி, எங்களிடம் ஜெபிக்க வருவார்கள். எப்படியாவது என் மகள் இந்த MBBS படிப்பை நல்ல படியாகப் படித்து முடித்து டாக்டராக வேண்டும் என்று சொல்லி ஜெபிக்க வருவார்கள். அவர்களுடைய மகள் நல்லபடியாக படித்து முடித்து டாக்டரானாள். அவளுக்குத் திருமணம் செய்தார்கள். திருமணத்திற்கு நீங்கள் கட்டாயம் வர வேண்டும். நீங்கள் கொடுக்கிற தேதியிலே நாங்கள் திருமணத்தை வைத்துக் கொள்ளுகிறோம் என்று வற்புறுத்திக்

கேட்டார்கள். அதன்படி அந்தத் திருமணத்திற்கு நாங்கள் சென்று மணமக்களை ஆசீர்வதித்து ஜெபித்தோம். அவர்களுக்கு அழகான ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதன்பின்பு அவர்களுடைய மகள் மருத்துவ துறையில் M.D. படிக்க வேண்டும். அதற்கு ஜெபம்பண்ணுங்கள் என்றார்கள். அதற்கும் ஜெபம் பண்ணினோம். அதற்கும் சீட் கிடைத்தது. அருமையாகப் படித்து முடித்தாள்.

அதன்பின்பு அதற்கும் மேல் உள்ள D.M. (Doctorate of Medicine) க்கு மகள் படிக்க வேண்டும். அது மிகவும் கஷ்டம். தமிழ்நாட்டிலேயே 6 அல்லது 7 பேருக்குத்தான் வாய்ப்பிருக்கும். அவள் அந்தத் தேர்வையும் எழுதப் போகிறாள். அதிலும் அவளுக்கு சீட் கிடைக்க வேண்டும் என்று ஜெபிக்கச் சொன்னார்கள். அந்தத் தேர்வில் 10 பேர் Pass பண்ணியிருக்கிறார்கள். 7 சீட்டுதான் இருக்கிறது. என் மகள் 7 பேருக்கு அடுத்துதான் இருக்கிறாள். நாங்கள் Counselling போக வேண்டியது இருக்கிறது. ஒரு 5 நிமிடம் எங்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். உங்களைப் பார்த்து ஜெபித்துவிட்டு செல்கிறோம். நிச்சயமாக எங்களுக்கு சீட் கிடைக்கும் என்று நம்புகிறோம் என்று வந்து ஜெபித்துவிட்டு மிகுந்த விசுவாசத்தோடு போனார்கள். அதன்படியாக அவர்களுடைய மகளுக்கு சீட் கிடைத்து அருமையாகப் படிக்கக் கர்த்தர் கிருபை செய்தார். இப்பொழுது அவள் DM முடித்துப் பெரிய Medical college ல் Dean ஆகப் பணிபுரிந்து கொண்டு இருக்கின்றாள்.

கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் மற்றும் கர்த்தர் மேல் வைத்திருக்கிற அன்பு, தாழ்மை அதனோடு கூட நாம் ஆண்டவரைத் தேடும்பொழுது, உங்களுக்கு வரவேண்டிய மேன்மை எப்படியாகிலும் வந்து சேரும். நீங்கள் இது இந்த வழியில் வருமா அல்லது இந்தத் திசையில் வருமா என்று யோசித்துக் கொண்டு இருப்பீர்கள். மேன்மையையும் கனத்தையும் கர்த்தர் தருகிறார்.

ஒருவேளை இதை வாசிக்கிற நீங்கள் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்தும், படிப்பைக் குறித்தும் கலங்கிக்கொண்டு இருக்கலாம். அவர்களைப் படிக்க வைப்பதற்கு எவ்வளவோ டியூசன் அனுப்புகிறீர்கள். முயற்சி செய்கிறீர்கள். அதனோடுகூட தேவனுக்குப் பயப்படுவதைப் பிள்ளைகளுக்குக்

கற்றுக்கொடுங்கள். எவ்வளவுதான் உயர்ந்தாலும் கர்த்தருக்குள் தாழ்மையாய் இருக்கக் கற்றுக் கொடுங்கள். கர்த்தர் நிச்சயமாக உங்கள் பிள்ளைகளை மேன்மைப்படுத்துவார்! உங்கள் பிள்ளைகளுக்கு மேன்மையான ஸ்தானத்தைக் கொடுத்து ஆசீர்வதிப்பார்! ஆமென்!

**GLORY TO GOD!**

# நமது ஆசீர்வாதம் தொலைக்காட்சி ஊழியத்தில் உங்கள் பங்கு!

கணக்கற்ற மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவும், தேவஆசீர்வாதத்தைக் கொண்டு செல்லவும் காரணமாக இருக்கும் நமது ஆசீர்வாதம் டிவி ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்! ஒவ்வொரு மாதமும் இதற்காகச் செலவுபண்ணும் தொகை மிகவும் அதிகம். நமது தொலைக்காட்சியில் விளம்பரங்களோ அல்லது பண ஆதாயத்திற்கான எந்த நிகழ்ச்சியும் ஒளிபரப்பப்படுவதில்லை. நிகழ்ச்சிகள், பாடல்கள் கொடுக்கும் தேவ ஊழியர்களிடம் ஒளிபரப்புத்தொகை எதுவும் வாங்குவதில்லை. மேலும் எந்த ஒரு நிறுவனத்தின் உதவியும் இதற்கு இல்லை. இந்த டிவி நிகழ்ச்சியின்மூலம் பிரயோஜனமடைந்து வரும் தேவப்பிள்ளைகள் 5 அப்பம் 2 மீனுக்கு அடையாளமாகக் கொடுக்கும் காணிக்கைகளைக் கொண்டுதான் இதன் தேவைகள் சந்திக்கப்படுகின்றன. Satelliteக்குச் செலுத்தப்படும் தொகை, கேபிள் டிவி இணைப்புகள் மற்றும் DTHல் (AIRTEL, SUN DIRECT & TATA PLAY) ஒளிபரப்பப்படுவதற்காகும் செலவு, நிகழ்ச்சிகள் தயாரிப்புகளுக்காகும் செலவு, ஊழியத்தில் பணிபுரியும் சகோதர, சகோதரிகளுக்குக் கொடுக்கும் ஊதியம், உபகரணங்கள் பராமரிப்பு... என்று ஒவ்வொரு மாதமும் பல லட்சங்கள் தேவை உண்டு.

குக்கிராமங்களிலும் பட்டணங்களிலும் படித்த மற்றும் படிக்காத தேவப்பிள்ளைகளுக்கு வசனம் எளிதில் சென்றுசேர, கர்த்தர் இந்தக் கிருபையின் நாட்களில் நமக்கு ஈவாகக் கொடுத்திருப்பதுதான் ஆசீர்வாதம் டிவி ஊழியங்கள்! எனவே இந்த ஊழியத்தை ஒருவராய்ச் சுமப்பது அரிது.

“நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்.” - ஏசாயா 32:20. “சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.’’ -2கொரி.9: 6,7. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## துதியுங்கள்! ஜெபியுங்கள்!

அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள் (2கொரிந்தியர் 1:11).

அநேகருடைய ஸ்தோத்திரங்களினால் கிருபை பெருகும் (2கொரி. 4:15) என்று எழுதியிருக்கிறபடி தேவகிருபை, தேவதயவு, தேவமகிமை ஊழியத்திலும் எங்களிலும் பெருகும்படிக்கு எங்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் தினமும் குறைந்தபட்சம் 300 ஸ்தோத்திரபலிகளை நீங்கள் ஏறெடுக்கவும், குறைந்தது 15 நிமிடங்கள் விண்ணப்பங்களைத் தேவனிடத்தில் ஏறெடுக்கவும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வெள்ளிக்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதம் டிவி ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்! செவ்வாய்க்கிழமைதோறும் ஏதாகிலும் ஒரு நேரம் ஆசீர்வாதத் திருச்சபை ஊழியங்களுக்காக உபவாசமிருந்து ஜெபியுங்கள்!

# நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்குக் காணிக்கை அனுப்புவதற்கான விவரங்கள்!

## 9952432020@tmb என்ற UPI ID

மூலமாக எந்த Payment Appலிருந்தும் பணம் அனுப்பலாம்.

G Pay PhonePe Paytm

## 9345678981 (Allen Paul)

என்ற எண்ணிற்கு உங்கள் காணிக்கைகளை அனுப்ப வசதி செய்யப்பட்டுள்ளது.

TMB Tamilnad Mercantile Bank Ltd
BHIM UPI PAYMENT ACCEPTED
SCAN QR CODE TO PAY
JESUS LOVES
Or Pay to UPI ID
9952432020@tmb

## இணையதளம், Mobile Internet மூலம் காணிக்கை அனுப்பும் விபரம்:

**www.blessingtv.tv/donation** என்ற இணையதள முகவரியில் உங்கள் Debit card மூலம் நேரடியாகக் காணிக்கை அனுப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது.

### வங்கி மூலம்

| ICICI | TMB |
|---|---|
| 'BLESSING TV' | 'BLESSING TV' |
| A/C No. : 6172 0103 4129 | A/C No. : 0041 5031 0875 177 |
| BRANCH : SIVAKASI | BRANCH : VIRUDHUNAGAR |
| IFS CODE - ICIC 000 6172 | IFS CODE : TMBL 000 0004 |

### மணியார்டர் / eMo மூலம்

மணியார்டர் வாயிலாகக் காணிக்கை அனுப்புகிறவர்கள் நமது முகவரிக்கு நேரடியாகக் காணிக்கை அனுப்பலாம். மணியார்டர் படிவத்தில் தகவலுக்கான இடத்தில் உள்ள முழு முகவரியையும் பங்காளர் எண்ணையும் தெளிவாக எழுத மறவாதிருங்கள்!

### டி.டி. / செக் மூலம்

டி.டி. மற்றும் செக் மூலம் காணிக்கை அனுப்புகிறவர்கள் 'BLESSING TV' என்ற பெயரில் உங்களுடைய டி.டி. மற்றும் காசோலையைத் தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பலாம்.

Powered by Razorpay
BHIM UPI
SCAN & PAY WITH ANY UPI APP
G Pay PhonePe Paytm

**JESUS LOVES**
**Blessing TV**

வங்கி மூலம் நேரடியாகக் காணிக்கைச் செலுத்துவோர், தயவாகத் தங்கள் ரசீதுதனை (ஜெராக்ஸ்) எங்களுக்கு அனுப்பி, ரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் இவ்வாறு அனுப்ப இயலாதவர்கள், கீழ்க்காணும் தொலைபேசி எண்களுக்கு SMS மூலமாக உங்கள் பெயர், முகவரி மற்றும் காணிக்கை விபரங்களை அனுப்பிவிடலாம். WhatsApp அல்லது இ-மெயில் மூலமாகவும் தெரியப்படுத்தலாம். Whatsapp : 9994079994, 9952432020.

**முகவரி:** பிளஸ்ஸிங் டி.வி, எழுப்புதல் ஜெப மையம், சூலக்கரை, விருதுநகர் – 626 003, தமிழ்நாடு. (அல்லது)
பிளஸ்ஸிங் டி.வி, எண். 3, இரண்டாம் தெரு, கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010, தமிழ்நாடு.
Our Address : BLESSING TV, REVIVAL PRAYER CENTRE, SOOLAKKARAI, VIRUDHUNAGAR - 626 003, TAMILNADU. (or)
BLESSING TV, No. 3, Second Street, Kilpauk Garden Road, Kilpauk, CHENNAI - 600 010, TAMILNADU.
Email : allenbtv@gmail.com Website : www.blessingtv.tv

மேலும் விபரங்களுக்குத் தொடர்புகொள்ள : 9994 07 9994 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை)

# 1,000 மைல் பயணம் ஒரே புள்ளியில் சந்திக்கும் ஆமைகள்!

தமிழகக் கடற்கரையில் இருந்து புறப்பட்ட ஆலிவ் ரிட்லி ஆமைகள், ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து வங்கக்கடலின் குறிப்பிட்ட புள்ளியில் ஒன்று கூடுகின்றன. விண்வெளி ஆராய்ச்சி போல, இந்த ஆமைகளின் உடலில் பொருத்தப்பட்ட செயற்கைக்கோள் கருவிகள் ஒரு வியப்பூட்டும் உண்மையை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளன. அவை அனைத்தும் 'இலங்கை டோம்' **(Srilanka Dome)** என்ற கடல் பகுதியை நோக்கிப் படையெடுக்கின்றன. ஒடிசா கடலோரப் பகுதிகளில் முட்டையிட்டு, பல்லாயிரக்கணக்கான ஆலிவ் ரிட்லி ஆமைகள், வங்கக் கடலின் ஆழமான பகுதிகளை நோக்கி சுமார் 1,000 மைல்கள் பயணம் செய்கின்றன.

ஒடிசா கடற்கரையில் முட்டையிடுவதற்காக வந்து செல்லும் ஆமைகள்,தங்கள் நீண்ட பயணத்தின் முடிவில், உணவு தேடுவதற்கும், தங்குவதற்கும்,ஓய்வெடுப்பதற்கும் இந்த 'இலங்கை டோம்' பகுதிக்குச் செல்கின்றன. ஆமைகளின் இடப்பெயர்வுப் பாதைகள், இனப்பெருக்க நடத்தை ஆகியவற்றை கண்டறிய,2021 முதல் 12,000 க்கும் மேற்பட்ட ஆமைகளுக்குச் செயற்கைக்கோள் மூலம் கண்காணிப்புக் கருவிகள் (Tagging) பொருத்தப்பட்டுள்ளன.

## என்ன இந்த 'கடல் டோம்'?

எளிமையாகச் சொன்னால், ஆழ்கடலில் இயற்கையாகத் தோன்றும் ஒரு ஊட்டச்சத்து நீரூற்று. கடல் காற்றும் நீரோட்டங்களும் கைகோர்க்கும் போது, ஆழத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் குளிர்ந்த, சத்துக்கள் நிறைந்த நீர் அப்படியே மேல்நோக்கி எழும்பும். இது பார்ப்பதற்கு ஒரு குடை அல்லது குவிமாடம் போலத் தெரிவதால் இதற்கு 'டோம்' என்று பெயர்.

சூரிய ஒளி படும் மேல் பகுதிக்கு இந்தச் சத்துக்கள் வந்தவுடன், அங்கு 'பிளாங்க்டன்' எனப்படும் நுண்ணுயிரிகள் கோடிக்கணக்கில் பெருகும் . இந்த நுண்ணுயிரிகளைத் தின்ன சிறிய மீன்கள் வரும். அவற்றை வேட்டையாடப் பெரிய மீன்களும், திமிங்கலங்களும்,கடல் ஆமைகளும் வரும். ஆழ்கடலின் செல்வம் மேல்தட்டு உயிரினங்களுக்கு விருந்தாக அமையும் இடமே இந்த டோம்.இலங்கைக்குக் கிழக்கே ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இந்த அதிசயம் நிகழத் தொடங்குகிறது. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் உச்சம் பெற்று செப்டம்பரில் மெல்ல மறைகிறது. ஒடிசாவிலிருந்து வரும் ஆமைகளும் தமிழகத்திலிருந்து செல்லும் ஆமைகளும் இந்த ஒரே இடத்தில் சந்திப்பது கடல்சார் அறிவியலில் ஒரு மிக முக்கியமான நிகழ்வு என ஆராய்ச்சியாளர்கள் வியக்கிறார்கள்.

இலங்கை டோம் மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளில் இத்தகைய உயிர்நாடிகள் உள்ளன. பசிபிக் பெருங்கடலில் உள்ள கோஸ்டாரிகா டோம்தான் உலகிலேயே அதிகம் ஆராயப்பட்ட பகுதி. இங்கு நீலத் திமிங்கலங்கள் முதல் சுறாக்கள் வரை தஞ்சம் புகுகின்றன. அட்லாண்டிக் பெருங்கடலில் கினியா மற்றும் அங்கோலா டோம். இந்தியப் பெருங்கடலில் சீஷெல்ஸ்-சாகோஸ் ரிட்ஜ் எனப் பல உள்ளன.

■ இவை நாங்கள் சேகரித்து வெளியிட்ட தகவல்கள் மட்டுமே.

# திருநெல்வேலி உபவாசக் கூட்டம்

18.07.2026

கடந்த நாட்களில் திருநெல்வேலியில் நடைபெற்ற ஆசீர்வாதம் டிவியின் உபவாசக் கூட்டத்தில் அநேக தேவப்பிள்ளைகள் கலந்துகொண்டு ஆசீர்வாதங்களையும் விடுதலையையும் பெற்றுக் கொண்டார்கள். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**


தேவனுக்கே மகிமை!

## 24 மணி நேர தமிழ் கிறிஸ்தவ செயற்கைக்கோள் தொலைக்காட்சி (Satellite TV) பார்த்துப் பயனடையுங்கள்!

இப்பொழுது, நமது ஆசீர்வாதம் டிவி

சேனல் நம்பர் **1594 ல்** வருகிறது

SUN DIRECT சேனல் நம்பர் 459லும்

airtel digital TV சேனல் நம்பர் 814லும்

வருகிறது.

அனைத்து கேபிள்களிலும் ஒளிபரப்பப்படுகிறது.

தேவப்பிள்ளைகள் பார்த்துப் பயனடையுங்கள்! ஆசீர்வாதம் பெறுங்கள்!

For any Details Please Contact: 9994 73 9994


## சென்னை ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரங்கள்!

முதல் ஆராதனை: காலை 7 மணி முதல் 9 மணி வரை

இரண்டாம் ஆராதனை : காலை 10 மணி முதல் 12 மணி வரை

ஒவ்வொரு புதன் கிழமையும் மாலை 7 மணி முதல் 8.30 மணி வரை Mid Week Service (சிறப்பு ஆராதனை) நடைபெறும்.

**சென்னை:**
தூய ஜார்ஜ் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
பச்சையப்பன் கல்லூரி எதிரில்,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம், சென்னை - 10.

மேலும் விபரங்களுக்கு :
93456789 83
9994 07 9994

## விருதுநகர் ஆசீர்வாதத் திருச்சபை ஆராதனை நேரம்!

காலை 10 மணி முதல் 12 மணி வரை

**விருதுநகர்:**
எழுப்புதல் ஜெப மையம்,
சூலக்கரை,
விருதுநகர்.